
விலை சதம் 20


# சுதந்திரன்

SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 1999, கார்த்திகை உ 26 புதன் (11-12-68) றம்ழான் 20 புத்தகம் 23 இதழ் 9




# கச்சதீவை கையளிப்பதற்கு பாரதப் பிரதமர் இணக்கம்?




(சிறி) "மாவோ" சிந்தனைகள்!

பிரச்சினைக்குரிய கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுப்பதற்கு பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடெல்லிப் பேச்சுவார்த்தைகளின் போது இலங்கைப் பிரதமர் திரு டட்லி சேனநாயகாவிடம் சூசகமாக சம்மதம் தெரிவித்துவிட்டதாக புதுடெல்லி வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுவதாக நமது சென்னை நிருபர் அனுப்பியுள்ள செய்தியொன்று கூறுகிறது.

ஆயினும், கச்சதீவு தமிழ் நாட்டுக்கே சொந்தமானது என்பதில் தமிழக அரசு உறுதியாக இருப்பதனால், இப்போதைய நிலையில் கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுக்கும் தமது முடிவைப் பகிரங்கப்படுத்தி தமிழக மக்களினதும், தமிழக அரசாங்கத்தினதும் கடுமையான எதிர்ப்பை சம்பாதித்துக்கொள்ளத் திருமதி இந்திரா விரும்பவில்லையென்றும் சொல்லப்படுகிறது.

கச்சதீவுப் பிரச்சினையில் இந்திய எதிர்க்கட்சிகளும் தமிழக அரசாங்கமும், இலங்கைக்கு விட்டுக் கொடுப்பதை கடுமையாக ஆட்சேபித்து வருகின்றன. கச்சதீவு கடந்த 300 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் நாட்டுக்கே சொந்தமாக இருந்து வருவதாக தமிழகக் கல்வி, தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அண்மையில் தெரிவித்திருந்தார். 300 ஆண்டுகளுக்கு மேலாக கச்சதீவு இராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு சொந்தமாக இருந்து வருவதற்கு ஆதாரமான தஸ்தாவேஜுகளை தமிழக அரசு இப்போது டெல்லிக்கு அனுப்பி வைத்துள்ளது.

கச்சதீவு பற்றி எவ்வித முடிவுக்கும் வருமுன்னர், தமிழக அரசைக் கலந்தாலோசிக்க வேண்டுமென தமிழக சட்ட அமைச்சர் திரு. மாதவன் கடந்த வாரம் பாரதப் பிரதமரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

கச்சதீவை இலங்கைக்கு விட்டுக் கொடுப்பதை தமிழரசுக் கழகத் தலைவர் திரு. ம. பொ. சி.யும் கடுமையாக எதிர்த்து சில மாதங்களுக்கு முன்னர் தமது பத்திரிகையில் எழுதியிருந்தார்.

## ஒலிபரப்புக் கூட்டுத்தாபன சபைக்கு

# தமிழர் ஒருவரை இன்னும் நியமிக்காமலிருப்பதேன்?

## ஆட்சியைக் கண்டிக்கிறார் செனட்டர் திருச்செல்வம்!

இருபத்தைந்து இலட்சம் தமிழர்கள் வாழும் இந்நாட்டில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இயக்குனர் சபைக்கு தமிழர் ஒருவர் இன்னும் நியமிக்கப்படாததேன்?

—இவ்வாறு மூதவை உறுப்பினர் திரு. மு. திருச்செல்வம் இம்மாதம் 6ம் திகதி மூதவையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசும்போது கேள்விக்கணை எழுப்பினார்.

திரு. திருச்செல்வம் மேலும் கூறியதாவது:—

"இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் இயக்குனர் சபைக்கு அங்கத்தவர்கள் நியமிக்கும் விஷயத்தில் பெரும் குறை ஒன்று காணப்படுகிறது. நான் அரசாங்கத்தில் அங்கத்துவம் வகித்த போது இவ்விஷயத்தை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தேன். இது வேண்டுமென்று செய்யப்பட்டதல்லவென்றும், தவறுதலாக நிகழ்ந்துவிட்டதென்றும், விரைவில் இக்குறைபாடு களையப்பட்டு தமிழர் ஒருவருக்கும் இடம் தரப்படுமென்றும் அப்போது அரசாங்கத்தின் சார்பில் கூறப்பட்டது. ஆனால் இன்னும் இது நிவர்த்திக்கப் படாதது வருந்தத்தக்கது.

"இப்போதுள்ள இயக்குனர் சபையில் அங்கம் வகிக்கும் இருவர், அப்பதவிக்கு எவ்வகையிலும் தகுந்தவர்கள் அல்லர். அவர்களுக்கு கலைஞானமோ, சங்கீத அறிவோ துளியும் கிடையாது. கட்சிக்கு விசுவாசமுள்ள கட்சித் தூண்கள் என்பதற்காகவே அவர்கள் இப்பதவிகளுக்கு நியமிக்கப் பட்டுள்ளனர். தமிழர் ஒருவரும் இடம் பெறச் செய்ய அரசாங்கம் உடன் நடவடிக்கையெடுக்க வேண்டும்"

### செலாவணியில் பாரபட்சம்

திரு. திருச்செல்வம், வட இந்தியாவுக்கு செல்லும் யாத்திரீகர்கட்கு வெளிநாட்டுச் செலாவணி ஒதுக்கும் விஷயத்தில் அரசாங்கம் இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் பாரபட்சம் காட்டுவதாகவும் தமது உரையில் அரசாங்கத்தை குற்றம் சாட்டினார்.

'வட இந்தியாவிற்கு செல்லும் பௌத்தயாத்திரீகர்

(9-ம் பக்கம் பார்க்க)

## கரடியனாற்றில்

# கமத்தொழிற் பாடசாலை நிறுவப்படவேண்டும்!

## இராசமாணிக்கம், துரைரத்தினம் சமர்ப்பிக்கவிருக்கும் பிரேரணை!

"மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த கரடியனாற்றிலுள்ள கமத்தொழிற்பாடசாலை, குண்டசாலை கமத்தொழிற் பாடசாலையையொத்தவகையில் மாணவர்களின் பயிற்சிக்குத் தேவையான வசதிகளுடன் தமிழ்மொழிவாயிலாகப் பயிற்சியளிக்கும் ஓர் உயர்தரக் கமத்தொழிற் பாடசாலையாக மீண்டும் ஆரம்பித்து வைக்கப்படவேண்டுமென இச் சபை கருதுகிறது."

—இவ்வாறு கூறும் பிரேரணையொன்றை பாராளுமன்றக் கூட்டத்தில் தனிநபர் பிரேரணையாக கொண்டுவருவதற்கு பட்டிருப்பு எம். பி. திரு. சி. மூ. இராசமாணிக்கமும், பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினமும் முன்னறிவித்தல் கொடுத்துள்ளனர்.

# இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் இலக்கிய ஏடுகள்



நா. பார்த்தசாரதி

இக்கட்டுரையில் தமிழ் இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சியைப் பற்றிக் கூறுவதற்கு முன் இந்தியாவிலும் தமிழகத்திலும் நவீன பத்திரிகைத்துறை எப்போது பரவலாக அறிமுகத்துக்கு வந்தது என்பதை ஓரளவு முன்னுரையாகச் சுருக்கித்தர வேண்டுவது இன்றியமையாதது.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய பிரிவுகளுக்கும், இயல், இசை, நாடகம் ஆகிய பிரிவுகளுக்கும் தமிழில் இலக்கணம் இருந்ததுபோல் பத்திரிகைத் துறைக்கு முன்னிலக்கணம் எதுவும் இல்லை. எப்படி நவீன இலககியத் துறைகளான சிறுகதை, நாவல், விமர்சனம் முதலியன நமக்கு ஆங்கில மொழியின் தொடர்பால் கிடைத்தனவோ அப்படியே நவீன பத்திரிகைத் துறையும் ஆங்கில மொழியின் தொடர்பால் நமக்குக் கிடைத்த ஒன்றுகும்.

தேசிய விடுதலை இயக்கத்தைப் பற்றிய உணர்வு தோன்றிய காலத்தில் அந்த இயக்கத்துக்கு உறுதுணையாகப் பயன்படும் என்ற காரணத்தினுல் தான் பத்திரிகைத் துறையைப் பற்றியே இந்தியாவிலும் தமிழகத்திலும் முதன் முதலாகச் சிந்திக்கத் தொடங்கினேம். அந்தச் சிந்தனை அப்போது தினப் பத்திரிகை, செய்திப் பத்திரிகை அளவில்தான் வளர்ந்தது.

பாரதியாரின் 'இந்தியா', சுதேசமித்திரன், இந்து, தினமணி' தமிழ்நாடு போன்றவை இவ்வாறு தோன்றியவையே. தமிழகத்தைத் தவிர தமிழ் வழங்கும் பிற நாடுகளான இலங்கை, மலேயா, பர்மா போன்ற பிற பகுதிகளிலும் தொடக்க காலப் பத்திரிகைத்தொழில் இந்த எல்லையில் தான் இருந்தது.

வாரப் பத்திரிகை, மாதப் பத்திரிகை, இலக்கியப் பத்திரிகை, நகைச்சுவைப் பத்திரிகை தொழில்துறைப் பத்திரிகை என்றெல்லாம் பிரிந்து பின்பு இன்றுள்ள நிலைக்கு கிளைத்தது இந்த ஆரம்ப எல்லையிலிருந்துதான் என்பதை யாரும் மறுக்க முடியாது.

இந்தப் பிரிவுகளில் இலக்கியப் பத்திரிகை (Literary Journal) என்ற பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டாலும் கடந்த கால் நூற்றுண்டுக்கால அளவில்தான் அது வளர்ச்சியும் வளமும் பல்வேறு வடிவமும் பெற்றிருக்கிறது. தொடக்க காலத் தமிழ் இலக்கிய ஏடுகள் யாவும்—இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகளிலும்—புலவர்களின் விவாதங்களிலுமே கவனம் செலுத்தின. பாமரத் தமிழ் மகன் அவற்றில் ஈடுபாடு கொள்ள அவை வாய்ப்பளிக்கவில்லை.

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'செந்தமிழ்', கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடான 'தமிழ்ப் பொழில்', சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் 'செந்தமிழ்ச் செல்வி'—ஆகியவற்றை இந்தத் தொடக்க கால இலக்கிய ஏடுகளில் சேர்த்துக் கொள்ளலாம். இவை தமிழ் இலக்கியப் பத்திரிகைகளாயினும், நவீன பத்திரிகை உத்திகளை இவை தேடவில்லை. புலமை எல்லையிலேயே (Intellectuals rank) இவை இருந்தன.

'நச்சினர்க்கினியன்', விவேகபாநு, வ. வெ. சு. அய்யரின் 'பாலபாரதி, விவேக சிந்தாமணி, டஞ்சாமிர்தம் போன்றவற்றையும் ஏறத்தாழ இந்தத் தொடக்க கால இலக்கிய ஏடுகளில் தான் இணைக்க வேண்டும். நவீன இலக்கியப் பத்திரிகைகளின் வளர்ச்சிக் காலம்என்பது மணிக்கொடி, கலைமகள், திரு. வி. க. வின் நவசக்தி, சந்திரோதயம், பொன்னி ஆகியவற்றிலிருந்து தொடங்குகிறது. தமிழ் இலக்கியப் பத்திரிகைகளில் புதுமையும் செழிப்பும் பெருகிய காலம் இது தான்.

## மணிக்கொடி—காலம்

மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, காந்தி, சக்தி, ராய. சொ. வின் ஊழியன், ஜெயபாரதி, பாரதமணி, கலைமகள், அ. சீ. ராவின் 'சிந்தனை' போன்றவற்றின் காலத்துக்கு முந்திய இலக்கியப் பத்திரிகைகளான செந்தமிழ், தமிழ்ப் பொழில் போன்றவற்றில், ஓர் இலக்கண முடிவு பற்றிய விவாதமோ, ஒருபழம் பாடலுக்குப் பொருள்காண்பதில் இரு பெரும் புலவர்களுக்கிடையிலுள்ள கருத்துவேறுபாடோ, கல்வெட்டு, சாஸன ஆராய்ச்சிகளோதான் இலக்கிய அம்சங்களாகக் கருதப்பட்டன!

ஆனல் மணிக்கொடி, சுதந்திரச் சங்கு, சக்தி, சிந்தனை, கலைமகள், அமுதசுரபி, பிரசண்ட விகடன், ஆனந்த போதினி, குமார விகடன், சுதேசமித்திரன் வாரப் பதிப்பு, மனிதன், கங்கை ஆகிய ஏடுகள் அந்தநிலையை மாற்றிச் சிறுகதை, நாவல், இலக்கியத்திறனுய்வு, புத்தக விமர்சனம் ஆகிய அம்சங்களையும் இலக்கிய ஏட்டுக்குரியவைகளாக்கி வளர்த்தன. தமிழுல் பனேகதை அம்சத்துக்கு இலக்கிய அந்தஸ்து ஏற்பட இந்தப் பத்திரிகைகளே முதன் முதலில் பாடுபட்டன என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

புதுமைகளையும் சோதனை இலக்கியத் துறைகளையும் வளர்க்க இந்த ஏடுகளின் காலத்துக்குப் பின்பே அதிக வாய்ப்புக் கிடைத்தது. இலக்கியப் போக்குக்கள் உலக இலக்கியத் தரத்துக்குப் பேசத்தக்க சில நிலைமைகள் இந்த இலக்கியப் பத்திரிகைகளால்தான் அறிமுகமாயின. இந்தக் காலகட்டத்தில் மேலைநாட்டின் இலக்கியத்துறைகளோடு தமிழ் எழுத்தாளர்களுக்கு ஏற்பட்ட பரிச்சயமும் இதற்கு ஒரு காரணம்.

இந்தப் பத்திரிகைகள் வகுத்த வழியில் பின்னல் இலக்கிய அப்சங்களோடு கவர்ச்சிகரமான பொதுமக்கள் அம்சங்களையும் கலந்து தமிழில் சில பத்திரிகைகள் வந்தன. அவை ஹனுமான், இந்துஸ்தான், அணிகலம் போன்றவை. இதே காலகட்டத்தில்தான் ரங்கூனிலிருந்து வெ. சாமிநாத சர்மாவின் 'ஜோதி'யும் வெளிவந்தது. பின்னுளில் வெளிவந்த கிராம ஊழியன், கலாமோகினி, காலச்சக்கரம், காதம்பரி, தேனி, சூருவளி போன்ற பத்திரிகைகளுக்கு எல்லாப்கூட மணிக்கொடி, கலைமகள் ஆகியவைதான் தூண்டுதலாக அமைந்தன. இலக்கியப் பத்திரிகை என்ற பெயரின் பொருள் முழுமை அடையத் தொடங்கிய சமயம் இதுதான் என்று கூற வேண்டும். 'மணிக்கொடி' நடந்து நின்று விட்டாலும் தமிழில் இலக்கியப் பத்திரிகைகளின்வரலாற்றை எழுத அதுதான் மைல் கல்லாக இன்னும் இருக்கிறது.

மணிக்கொடியும், கலைமகளும், ஒரு கால எல்லையில் தமிழ் இலக்கியத்தின் புதிய கிளைகளில் பல சோதனைகளும், சாதனைகளும் செய்து பார்த்த ஏடுகள். அந்தச் சோதனைகளும் சாதனைகளுமே பிற்காலத்தில் பல இலக்கியப்பத்திரிகைகளுக்கு முன்மாதிரியாக அமைந்தன. பத்திரிகைத் தொழிலின் இலக்கிய ரீதியான வளம் இந்த இரண்டு பத்திரிகைகளாலும் ஒரு காலத்தில் துல்லியமாகவும், துலாம்பரமாகவும் நிரூபிக்கப்பட்டன.

தமிழில் உரைநடை வளர்ச்சியின் திருப்புமுனைக் காலமாக இந்தப்பத்திரிகைகளின் காலம் இருந்ததனுல்—இவை புதிய புதிய இலக்கிய வங்களை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தின. பாரதியின் தூண்டுதல் இந்தக் காலகட்டத்துத் தமிழ் இலக்கியத்தை வளர்க்கத் துணை செய்தது. வசன நடையில் கவிதையின் நளினமும் கவிதையில் வசன நடையின் எளிமையும் விரவுகிற அழகிய தமிழ் அமைப்பைப் பாரதி இந்தப் பத்திரிகைகளுக்கும் இவற்றில் எழுதியவர்களுக்கும் உதவியிருந்தான்.

பாரதியுகத்தின் உத்வேகம் தமிழ்ப்பத்திரிகைகளின் இலக்கிய எழுச்சிக்கும் துணை புரிந்தன. பிற்காலத்தில் பாரதிதாசனின் 'குயிலும்', சுரதாவின் 'காவியமும்' கவிதை இலக்கிய ஏடுகளாக நடக்கவும் இந்தப் பாரதியுகத்துத் தூண்டுதலே முன்விளைவாக இருந்திருக்க வேண்டும் என்று அநுமானிக்க இடமிருக்கிறது. தமிழ் இலக்கிய ஏடுகளை ஒரு குறிப்பிட்ட நம்பிக்கையூட்டும் நிலைக்குக்கொணர்ந்தகாலம் இதுதான்.

## இடைக்கால நிலைமைகள்

அதன் பின் இடைக்கால எல்லையில் ஜனரஞ்சக அம்சமும் பத்திரிகைத்தொழிலில் கவனிக்கப் பட்டது. 'கல்கி' யின் எழுத்துப் பணியால் 'விகடன், கல்கி போன்ற இதழ்கள் சிறப்படையத் தொடங்கின. அவை இலக்கிய எல்லையிலிருந்து பெருகித் தம்மை இன்னும் எளிமையாக்கிக் கொண்டு-வியாபாரமாகவும் மாறின. இலக்கியப் பத்திரிகைகள்—என்ற பெயர் குன்றிப் 'பத்திரிகை இலக்கியம்' என்று குறிப்பிடத்தக்க சில துணை அம்சங்கள் பத்திரிகைத் தொழிலுக்குக் கிடைத்தன.

அரசியல் தலையங்கம், நகைச்சுவைத் துணுக்குக்கள், தொடர்கதை, போன்ற அம்சங்கள் மிகமிக எளிமையாக்கப்பட்டன. இலக்கிய நிலைகளை விடப் பத்திரிகைத் திறன்கள் கவனிக்கப்பட்டன. எவ்வளவு செம்மையாக நடத்தப் படுகிறது, என்பதைவிட எவ்வளவு எவ்வளவு இலட்சம் பேர் படிக்கிருர்கள் என்பதே பெருமையாகமாறியகாலம் இதுதான். இலக்கியப் பத்திரிகைகள் தங்கள் நிலைக்குப் பயந்து, தயங்கிய காலமும் இதுதான்.

ஏறக்குறைய மேலைநாட்டுப் பத்திரிகைத் துறையின் விளைவு இந்தச் சமயத்தில் தமிழிலும் ஏற்பட்டது. பத்திரிகைத் துறை செல்வாக்கான ஒரு தொழிலாக, ஜனநாயக சாதனமாக மாறியது; மாற்றப்பட்டது. இரண்டொரு இலக்கியப் பத்திரிகைகளையும் இந்த நிலை நன்கு பாதித்தது' இந்தச் செல்வாக்கின் முழுப் பயனைக் 'குமுதம்' போன்ற வெகுஜன சஞ்சிகைகள் விளைவுறச் செய்தன. இதே சமயத்தில் தென்மொழி, முத்தாரம் போன்ற ஏடுகள் மொழியுணர்ச்சிக்காகப் பாடுபடத்தோன்றியபோது தமிழ்ப்பொழில் போன்ற பழைய ஏடுகளின் நோக்கத்துக்குப் புதிய விறுவிறுப்புப் பிறந்தது.

அடுத்த வாரம் முடியும்

# யாழ்- மேற்றிராசன புதிய துணை ஆயர்

யாழ்ப்பாணம் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவின் ஆசனக் கோவில் பங்குக் குரவரான வண. பிதா லீயோ இராசேந்திரம் அன்ரனி அவர்கள், பரிசுத்த ஸ்தானத்திஞலே யாழ்ப்பாண மேற்றிராணியாரான ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டவர் அவர்களுக்குத் துணை மேற்றிராணியாராக நியமிக்கப்பட்டிருக்கிருர்.

தமது ஆழ்ந்தபக்தி, இயற்கையான தாழ்மை, கபடமற்ற போக்கு, எளிமையான சீவியம், ஆத்ம வாஞ்சை ஆதியாம் விசேட சுகுணங்களினுல் எல்லோரினதும் அன்பையும், நன்மதிப்பையும் பெற்றுள்ள இக் குரவரின் நியமனத்தினுல் அக்களிப்படையாதார் எவருமிலர்.

புதிய துணை ஆயர், 1927ம் ஆண்டு சித்திரை 19-ம்திகதி, ஊர்காவற்றுறையைசேர்ந்த கரம்பனிலே போஸற் மாஸ்ரர் லீயோ இராசேந்திரம் அன்ரனினதும் அவர் மனைவி பேதுருப்பிள்ளை மரியப் பிள்ளையினதும் கடைசிப் பிள்ளையாகப் பிறந்தார்.

அன்ரனி மேற்றிராணியார் தகப்பன் வழியிலும் தாய்வழியிலும் பரம்பரையாகவே திருச்சபைக்குத் தொண்டு செய்யும் குடும்பங்களிலே உதித்தவர்.

மாணவன் அன்ரனி தமது ஆரம்ப கல்வியைக் கரம்பனிலுள்ள திருக்குடும்பக் கன்னியரிடமிருந்து பெற்றபின், ஊர்காவற்றுறை அர்ச். அந்தோனியார் கல்லூரியைச் சேர்ந்தார். அங்கே தேவ அழைப்புக்குச் செவிசாய்ந்து 1940-ம் ஆண்டு தை மாதம் 14-ம் திகதி யாழ்ப்பாணம் அர்ச். மர்த்தினுர் குருமடத்தைச் சேர்ந்து அர்ச். பத்திரிசியார் கல்லூரியிலே கல்வி பயின்று பரீட்சைகளிலே கண்ணியமாகச் சித்தியடைந்தார்.

அதன் பின் கொழும்பிலுள்ள அர்ச். பேஞட் குருமடத்திற்கு அனுப்பப்பட்டாலும் அங்கே அவர் தரித்தது 3 கிழமை மாத்திரமே. சிரேஸ்டர்களின் கட்டளைப்படி 1948 ம் ஆண்டு புரட்டாதி 24-ம் திகதி இலங்கையை விட்டு ஐப்பசி 11-ம் திகதி ரோமாபுரியை அடைந்து அங்குள்ள உலகப் பிரசித்தி பெற்ற வேதபோதகச் சர்வகலாசாலையில் ஏழு ஆண்டுகள் தங்கி வேதசாஸ்திரங்கள் கற்று வந்தார். 1954-ம் ஆண்டு மார்கழி 7-ம் திகதி பியெற்றோ சிகிஸ்மொன்டி ஆண்டகை அவர்களால் குருவாக அபிஷேகம் செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் திரும்பியதும், 1956 புரட்டாதி வரையும் நல்லூர் மீசாமிலும், ஆனி 1958 வரை யாழ். ஆசனக் கோவிலிலும் உதவிப் பங்குக் குரவராகத் தொண்டு செய்தார். பின்பு நான்கு வருடங்கள் திருகோணமலை மேற்றிராணியாரின் காரியதரிசியாகவும், 4 வருடங்கள் தோலகட்டி ஆச்சிரமத்தின் தலைவராகவும் அடுத்து நாரந்தனைப் பங்குக் குரவராகவும், 1967 ஆனியிலிருந்து இன்றுவரை யாழ்ப்பாண ஆசனக் கோவில் பங்குக் குரவராகவும் தொண்டு புரிந்து வந்திருக்கிருர்.

''பரம அன்பில் உண்மையோடு நடக்க'' என்பதே அன்ரனி மேற்றிராணியாரின் விருது வாக்கியம்.

திரட்டியவர்:

யே. ரேஸ்மலர்,

ஊர்காவற்றுறை.

தகவல் 'காவலன்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"மடுல்சிமை— நடனமாடி"

கே: நான் உங்கள் 'சுதந்திரனை' லவ் பண்ணுகிறேன். அதை எனக்குத் தருவீரா? சீதனம் என்ன?

ப: எனது பதிலே சீதனம்.

கே: நான் இருக்கும் இடமோ சிங்கள மயம், ஆனல் நான் தமிழன்—த. அ. கட்சியை பற்றி அங்கு பேசுவதென்றால்?...

ப: தாராளமாகக் பேசலாம். தமிழரசுக் கட்சி சிங்களவருக்கு எதிரான கட்சியல்லவே!

ஃ

ந. ராஜு
அக்கரப்பத்தனை.

கே; வேலை நிறுத்தம் செய்ய போகும் தொழிற் சங்க தலைவர்கள் பிரதமரிடம் சமர்ப்பித்த அறிக்கையில், தொழில் அதிபர்களுக்கு அளித்து வரும் சலுகைகளை வாபஸ் பெற்று அவர்களிடம் இருந்து மொத்த விற்பனை வரியை அறவிட வேண்டும் என்று ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்களே; அப்படி அந்த வரியை அவர்களிடம் அறவிட்டால், பொதுமக்களை பாதிக்க கூடுமா?

ப: கண்டிப்பாகப் பாதிக்கும். செட்டி நட்டம் ஊர் மேல்தானே!

ஃ

ஆ. இராஸ்
சதர்லெண்டு, எல்ல.

கே: சிறுவர் செய்யும் குற்றத்திற்கு யார்பொறுப்பு?

ப: பெரியவர்களே! பெரியவர்களைப் பார்த்தே சிறுவர்களும் தவறிழைக்கின்றனர்!

ஃ

சி. கருணநிதி
சதர்லேண்ட் எல்ல.

கே: தினபதியில் வெளிவரும் செய்தியை பொய் என்கிறீர்களே. ஏன் தினபதிக்கும் உங்களுக்கும் கோபமா?

ப: உண்மையைக் கூறினல் கோபம் என்று அர்த்தமா?

ஃ

ஆ. சுந்தரராஜ்
சதர்லேண்ட், எல்ல.

கே: இலங்கையில் இரண்டு சார்பு கம்யூனிஸ்ட் கட்சி வளர்ந்து வருகிறது. இந்த இரண்டிலும் எந்த சார்பு ஆளும் கட்சியாக வரும்? சீனச்சார்பா? அல்லது ரசியச்சார்பா?

ப: எதுவும் வரக்கூடாது; சீனசார்பு கம்யூனிஸ்ட் வந்தால் சீனருககும், ரஷிய சார்பு கம்யூனிஸ்ட் வந்தால் ரஷியருக்கும் நாம் அடிமைப்பட வேண்டிநேரிடும்!

ஃ

இ. இராஜ்
நாவல்நகர்.

கே: மட்டுநகர் நகரசபை ஆளுங்கட்சியை சேர்ந்த ஐந்து அங்கத்தவர்கள் மேயர்மீது நம்பிக்கையில்லை என்று திரும்பவும் எதிர் கட்சி குழுவில் சேர்வார்களா?

ப: சேர்வார்களோ என்னவோ, யாழ். மாநகரசபையின் வியாதி மட்டுநகருக்கும் தொற்றிவிட்டது என்பது மட்டும் உண்மை!

கே: தனிப்பெரும் தலைவரின் பேச்சை ஒன்றும் காணேம். இப்போது அடங்கி விட்டாரா?

ப: நாகபாம்புபுல்லுக்குள் மறைந்து கிடந்தால் அதன் விஷம் இறங்கிவிட்டதென்று அர்த்தமா?

ஃ

எஸ் ஜே. நாதன்
தலவாக்கொல்ல.

கே: எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூதூர்த் தொகுதியில் தமிழரசுக கட்சி அபேட்சகரை நிறுத்துமா?

ப; கண்டிப்பாகநிறுத்தும்!

கே: தமிழரசுக் கட்சியின் இரு எம். பீக்கள் பதவிகளை ராஜினமா செய்வதாயும் ராஜினமா செய்து விட்டு ஒருவர் மலேசியா செல்ல விருப்பதாயும் மற்றவர் மலையகத்தில் பணிசெய்யப் போவதாயும் ஒருபத்திரிகை செய்தி பிரசுரித்து இருந்தது இது உண்மையா?

ப; முழுப் பொய்! தயவு செய்து, தினசரிகள் செய்தி கிடைக்காமல் நடத்தும் இப்படியான கயிறு திரிப்புகளில் ஏமாந்து மூளையை உடைத்துக் கொள்ளாதீர்கள்!

ஃ

எ. ஜபருல்லாகான்
திருகோணமலை.

கே: குறிப்பிட்ட கட்சியையும் குறிப்பிட்ட மூன்று தலைவர்களையும் தாக்கியும் தூற்றியும் எழுதுவதுதான் நீங்கள் கண்ட பத்திரிகா தர்மமா?

ப: தாங்கள் கூறுவது தவறு. யாரையும் தூற்றுவது சுதந்திரனின் நோக்கமல்ல. தமிழினத்துக்கு துரோகம் செய்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் மீது தயவு தாட்சண்யம் பாராமல் மக்கள்முன் இழுத்துவந்து அவர்களது சுயநலத்தை அம்பலப் படுத்துவதே நமது இலட்சியம்!

ஃ

வே: நவரத்தினம்
அ. தினகரன்
கரணவாய் தெற்கு

அடுத்த தேர்தலில் எந்த அரசாங்கம் வந்தாலும் தமிழரசுக் கட்சி ஆதரவு கொடுக்குமா?

ப: பதவிக்கு வரும் அரசாங்கம் தமிழ் மக்களின் உரிமைகளில் எப்படி நடந்து கொள்ளப் போகிறது என்பதைப் பொறுத்து அதை கட்சி தீர்மானிக்கும்!

ஃ

எம். கே. டி. பசீர்
சித்தன்கேணி.

கே: இலங்கை அரசியலில் இன்று தமிழரசுக் கட்சியின் நிலை என்ன?

ப: ஓடு மீன் ஓடி உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கின் நிலைதான்!

அ. அன்ரன் யேசுதாசன்
மிருசுவில்.

கே: அன்னை, தந்தை, தெய்வம் இவற்றில் மிகப் பெரியவர் யார்?

ப: அன்னை தந்தைக்குள் தெய்வம் அடக்கம். அன்னைக்குள் தந்தை அடக்கம். ஆகவே, அன்னையே உயர்ந்தவள்!

ஃ

ஆர். பாலகிருஷ்ணன்
மாத்தளை.

கே: சென்னை மாநகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் கட்சி பரவாயில்லைப் போலிருக்கிறதே!

ப: என்ன இருந்தும் மாநகராட்சியைக் கைப்பற்ற முடியவில்லையே! அகில இந்திய காங்கிரஸ் போன்ற பெரிய கட்சி ஒரு மாநகராட்சித் தேர்தலில் சில வட்டாரங்களை அதிகமாக பெற்றதில் பாராட்ட என்ன இருக்கிறது?

கே: சதியும், விதியும் சேர்ந்து கொண்டால்...?

ப: மதியும் 'மக்கர்' பண்ண ஆரம்பிக்கும்!

ஃ

பூ. பூபாலசிங்கம்
கைதடி வடக்கு.

கே: தமிழ் வித்துவான்களாகவும் பண்டிதர்களாகவும் இருந்துகொண்டு 9ம் வகுப்பு தமிழ் மலரில் உள்ள தவறுகளை தமிழ்ப்புலவராகிய பண்டிதர் கா. பொ. இரத்தினம் சுட்டிக்காட்டிய பின்னும் ஏன் ஏற்க மறுக்கிறார்கள்?

ப: ஏற்றால் தங்கள் மானம் கப்பலேறி விடுமென அஞ்சுகிறார்கள்!

ஃ

கண்ணன்,
வவுனியா.

கே: தேசிய அரசாங்கத்தில் ஜீ. ஜீ. சேர்ந்து இதுவரை சாதித்ததென்ன?

ப: அதுதான் அவர் அண்மையில் பகிரங்கமாக கூறியிருந்தாரே—ஆசிரியர் இடமாற்றங்களை இரத்துப்பண்ணியதுதான் தமது ஒரே சாதனையென்று!

கே: உடுப்பிட்டி எம். பி. என்ன செய்கின்றார்?

ப: கிடைத்த பதவியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்.

கே: வவுயா எம். பி. சுதந்திரக் கட்சியில் சேரும் வதந்தி உலவுகிறதே!

ப: நெருப்பில்லாமல்புகை வருமா? எப்படியென்றாலும் "சீட்"டை காப்பாற்ற வேண்டுமே!

ஃ

சுப்பிரமணியம்
கொழும்பு-6.

கே: இலங்கை மக்கள் எதில் முன்னேறியிருக்கிறார்கள்?

ப: பிள்ளை பெறுவதில்!

ஃ

பொ. கலைச்செல்வி,
ஏழாலை மேற்கு.

கே: தமிழர்களாக இருந்துகொண்டும் தமிழ்மொழியை உதறித்தள்ளிவிட்டு அந்நிய மொழியில் உரையாடுவதுதான் பெருமை என்று சிலர் எண்ணுகிறார்களே. இந்தத் தாய்மொழித் துரோகிகளின் இழிவு நிலை மாறவே மாட்டாதா?

ப: மாறும்—தமிழைத் தவிர வேறு அந்நிய மொழிகளைத் தமிழர்கள் படிக்காமலிருந்தால்!

கே: தான் நினைத்த குறிக்கோளை அடைவதற்கு ஒரு மனிதன் முதலில் செய்ய வேண்டிய செயல் எது?

ப: அந்தக் குறிக்கோளை அடைவதற்குத் தன்னைத் தயாராக்கிக்கொள்ளவேண்டும்!

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி.
கொழும்பு-12

# அங்கும் இங்கும்

ஆபிரிக்காக் கண்டத்தை உலகுக்குக் கண்டுபிடித்து அறிவித்தவரான டாக்டர் லிவ்விங்சைச் சந்தித்தபேர் வழியொருவர் இன்றும் உயிருடன் இருக்கிறார் என்றால், நீங்கள் நம்புவீர்களோ? நம்பித்தான் ஆகவேண்டும்.

டாக்டர் லிவ்விங்ஸ் என்பவரை 1859 ம் ஆண்டிலே சந்தித்த இந்த அதிசய மனிதர் இன்னும் உயிர் வாழ்கிறார். ஆபிரிக்கமலைச் சிகரங்களின் திலகமாய் விளங்கிடும் கிளி மாஞ்சரோ சிகரத்தின் சரிவிலே இவர் வசிக்கிறார். இவரது பெயர் சரக் குரகோரா என்ற சாம்சன்!

இவருக்கு வயது 158 ஆகிறது.

இத்தனை வயதாகியும் கூட இவருக்கு களைப்போ அலுப்போ உண்டாவதைக் காண்பது அரிது. தன்னுடைய நிலத்தில் தானே உழுது உண்டு வாழ்வதே தனக்குத் திருப்தியாகஇருக்கிறது என்கிறார் 158 வயது சாம்சன்.

இவருக்கு 58 சகோதரர்களும் 145 சகோதரிகளும் உண்டு.

123 வயதில் இறந்து போன இவருடைய தந்தைக்கு 39 மனைவிகள் இருந்தார்கள்.

தந்தை வழியிலேயே தனயனும் செல்லவில்லை. திருமணவிஷயத்தில் மூன்றே மூன்று பேரை மணந்து அதில் இரண்டு பேரை விவாகரத்தும் செய்து விட்டார் சாம்சன்.

1934 ல் அவளும் மாண்டு போகவே அப்போது தனது 125 வது வயதில் மீண்டும் ஒருத்தியை மணந்து கொண்டார் அவர்.

இந்த அதிசய மனிதர் சாம்சனுக்கு 136 வயதாகும் போது அவள் ஒரு குழந்தைக்கு தாயானள்.

உலகப்போர் இரண்டையுமே பார்த்த இந்த சாம்சன் மரணத்தை வென்றவன் நான் என்கிறார். புன்முறுவல் பூத்த முகத்தோடு.

அண்மையில் தான் அவருக்கு கண்ணில் சதை வளர்ந்து ஆபரேஷன் செய்து கொண்டார்.

ஆபிரிக்காவைக் கண்ட லிவங்ஸ் டோனைக் கண்டு பழகியிருந்த போதும் கூட வெள்ளையரோடு பழக கட்டோடு எனக்குப் பிடிக்காதென்கிறார் சாம்சன்.

●

ஆங்கிலப் பேரறிஞர் ஆஸ்கார் வயிலட் தமது இருபத்தேழாவது வயதில் அமெரிக்காவுக்கு சென்றிருந்தார். அச்சமயம் அவர் 'மிசௌரி'யில் தங்கியிருந்தபோது இங்கிலாந்திலிருந்த தம் நண்பருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார்.

'என்வீட்டிலிருந்து சுமார் மூன்று பர்லாங் தூரத்தில் மக்களெல்லாம்சேர்ந்து ஒரு வீட்டை இடித்துக் கொண்டிருக்கிறாகள். அது ஜெஸ்ஸிஜேம்ஸ் என்ற ரயில் கொள்ளைககாரனின் வீடு. அவன் பல கொலைகளையும் செய்திருக்கிறன். அவன் சமீபத்தில் இறநது விட்டான். அவன் ஞாபகார்த்தமாக அவனுடைய பொருளை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தச் சனங்கள் அவனுடைய வீட்டை இடித்து ஆளுக்கொரு சாமானக எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆச்சரியமாயிருக்கிறதா? அமெரிக்காவில் தனி நபரைப் போற்றிப் புகழும் வழக்கம் மிகமிக அதிகம். அதுவும் அவன் கொள்ளைக் காரனுகவோ கொலை காரனுகவோ இருந்து விட்டால் கேட்கவேவேண்டாம்'

'வெள்ளாடு'

●

கூந்தல் செழுமையாக வளர்வதற்கும் இளநரை நீங்கி, நல்ல கருமை நிறத்தை அடைவதற்கும் மிகச் சுலபமான வழி ஒன்று உள்ளது. கருவேப்பிலை எல்லோருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய பொருள். அதனைத் தண்ணீர் ஊற்றுமல், நன்றாக விழுதுபோல் அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும். பின்பு அந்த விழுதைத் தேங்காய் எண்ணெயில் போட்டு நல்ல மணற் பருவம் வரும்வரை காய்ச்சி இறக்க வேண்டும். எண்ணெய் இப்போது நல்ல கரும் பச்சை நிறமாக இருக்கும். கருவேப்பிலையின் அளவு கூடுவதோ குறைவதோ நமது விருப்பத்தைப் பொறுத்தது. எண்ணெய் ஆறிய பிறகு அதனை வடிகட்டி வைத்துக் கொண்டு தினந்தோறும் உபயோகித்து வந்தால் சிறந்த பலனைக் காணலாம். கூந்தல், மிகுந்த கருமை நிறத்தை அடையும். இதற்கு ஆகும் செலவு மிகவும் குறைவு என்பதோடு இது எளியதொரு முறையுமாகும். எண்ணெயைக் காய்ச்சும்போது, அது மணற்பருவம் தாண்டி, சிவந்த நிறம் வந்து விடாமல் கவனமாக இருக்க வேண்டும்.

●

"எனக்கு மனிதனை விடச் சிறந்த கருத்துக்கள் இல்லை; மனிதன் தான், மனிதன் மட்டும் தான், எல்லாப் பொருள்களுக்கும் படைப்பாளி; அவனே அற்புதம் செய்வோன், அவனே இயற்கைச் சக்திகளின் எதிர்காலச் தலைவன்!—மார்க்ஸிம் கார்க்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# இச்சிறிய உண்மையை உணர்வதற்கு இருபது ஆண்டுகளா?

தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவரை அறியாமலே மெல்ல மெல்ல ஒரு "தமிழரசுக் கட்சிக்காரராகி" வருகிறார் என்பதை அண்மைக்காலமாக அவர் வெளியிட்டுவரும் சில கருத்துக்கள் தெட்டத் தெளிவாகச் சுட்டிக் காட்டுவதாயிருக்கின்றன.

தமிழரசுக்கட்சியும் சுதந்திரனும், கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக எடுத்துக்கூறி வரும் சில கருத்துக்களை, அன்று அவையெல்லாம் வெறும் கற்பனைகளென்றும் பொய் என்றும் கூறி வந்த திரு. பொன்னம்பலம், இன்று அதே கருத்துக்களை, தாமே கண்டுபிடித்த புதிய கருத்துக்கள் போன்று தமிழ் மக்கள் முன்பு கடை விரித்து வருகிறார்.

தமக்சென்று சொள்கை, இலட்சியம், கோட்பாடு எதுவுமற்றவர், ஏனைய அரசியற் கட்சிகளின் கருத்துக்களைத் திருடி அரசியல் வியாபாரம் நடத்துவதைக் கண்டு நாம் ஆச்சரியமடையவில்லை.

தமிழ்ப் பிரதேசத்தில் நடைபெறும் சிங்களக் குடியேற்றத்தின் பயங்கர ஆபத்துக்களையெல்லாம் நாமும் தமிழரசுக்கட்சியும் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகச் சுட்டிக்காட்டி அவற்றை வன்மையாக எதிர்த்து வருவது தெரிந்ததே. ஆனால் சில திங்களுக்கு முன்னர்தான் சிங்களக் குடியேற்றத்தின் அபாயத்தை ஏதோ தாமே முதன் முதலாகக் கண்டு பிடித்தவர்போல திரு. பொன்னம்பலம் அலறிப் புடைத்துக்கொண்டுமுழங்கியிருந்ததை வாசகர்கள் இதற்குள் மறந்திருக்கமாட்டார்கள்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டமொன்றில் பேசிய திரு. பொன்னம்பலம், ஏதோ புதியதொரு அரசியல் உண்மையைக் கண்டுபிடித்துவிட்டவர்போல, எந்தச் சிங்கள அரசாங்கம் வந்தாலும் தமிழ் மக்களுக்கு பிரயோசனமில்லை என்று கூறியிருக்கிறார்.

இதே கருத்தைத்தான் நாம் கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாகப் பன்னிப் பன்னிக் கூறிவருகிறோம். தமிழரசுக் கட்சியும் எடுத்துச் சொல்லி வருகிறது.

யூ. என். பி., சுதந்திரக்கட்சி, இடதுசாரிக் கட்சிகள்—எவை ஆட்சிக்கு வந்தாலும் தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை அதனால் எவ்வித நன்மையுமே ஏற்படப் போவதில்லையென்றும், தமிழ் பேசும் மக்களை இந்த நாட்டில் ஆளப்படுபவர்களாகவும் சிங்களவர்களை ஆளுபவர்களாகவும் மாற்றியுள்ள இன்றைய ஒற்றையாட்சி அரசியலமைப்பு நீக்கப்பட்டு, தமிழினமும் ஆளும் இனமாக மாற வழி வகுக்கும் ஓர் ஆட்சியமைப்பு ஸ்தாபிக்கப்படவேண்டும் என்றும் திட்டவட்டமாக சுதந்திரனும் தமிழரசுக் கட்சியும் வாதாடியும் போராடியும் வருகின்றன.

ஆனால் அன்று தமிழரசுக் கட்சி இதையெல்லாம் எடுத்துக்கூறியபோது, மந்திரிப் பதவி மயக்கத்திலிருந்த திரு. பொன்னம்பலம் தமிழரசுக் கட்சி கூறுவதெல்லாம் பொய் என்றும் சிங்கள கட்சிகளில் குறிப்பிட்ட ஒரு கட்சியுடன் ஒத்துழைப்பதில்தான் தமிழ் பேசும் மக்களுக்கு கதிமோட்சம் தங்கியிருக்கிறதென்றும் பகிரங்கமாகவே கூறிவந்தார். இன்றும்கூட சிங்களக் கட்சிகளில் குறிப்பிட்ட ஒரு கட்சியுடன் மட்டுமே ஒத்துழைக்கவேண்டும் என்றதமது நிரந்தரக் கொள்கையை திரு. பொன்னம்பலம் கைவிட்டதாகத் தெரியவில்லை.

எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழினத்துக்கு எவ்வித நன்மையுமில்லை என்ற இந்தச் சிறிய அரசியலுண்மையைக் கண்டுபிடிக்கவே இராணி ஆட்புக்காத்தான திரு. பொன்னம்பலத்துக்கு இருபது ஆண்டுகள் பிடித்தன என்பதை நினைக்கும்போது தமிழ் பேசும் மக்களுடன் சேர்ந்து நாமும் கழிவிரக்கப்படுவதைத் தவிர வேறு வழியில்லை.

எந்தச் சிங்களக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தமிழினத்துக்கு எவ்வித நன்மையுமில்லையென்று கூறும் திரு. பொன்னம்பலம், தமிழினம் இந்த நெருக்கடியிலிருந்து விடுதலை பெறுவதற்குக் கூறும் மார்க்கமென்ன? இதில் ஆக வேடிக்கையென்னவென்றால், சிங்கள ஆட்சிகளால் தமிழினத்துக்கு நன்மையில்லையென்று கூறிக்கொண்டே, ஒற்றையாட்சி அமைப்பே தமிழினத்துக்கு கதிமோட்சம் தரவல்லது என்று திரு. பொன்னம்பலம் கூறுவதுதான்.

இந்தநாட்டிலே ஒற்றையாட்சி அரசியலமைப்பு இருக்குமட்டும் சிங்களக் கட்சிகள்தான் எப்பொழுதும் மாறிமாறி ஆட்சிக்குவந்து கொண்டிருக்கும் என்ற சின்ன உண்மைகூட திரு. பொன்னம்பலத்துக்கு புரியவில்லையா அல்லது புரியாதது போல நடிக்கிறாரா?

இந்நாட்டின் இன்றைய அரசியலமைப்பு மாற்றியமைக்கப்பட்டு ஓர் கூட்டாட்சி அரசியலமைப்பு உருவாக்கப்பட்டாலொழிய, இந்நாட்டில் தமது பிரதேசங்களையாவது ஆட்சிபுரியும் உரிமையைக் கூட தமிழ் பேசும் மக்கள் அடைய வாய்ப்பு ஏற்படமுடியாது. இதை திரு. பொன்னம்பலம் ஒப்புக் கொள்வாரா?

எந்தச் சிங்கள ஆட்சிவந்தாலும் தமிழனுக்கு நன்மை கிடையாது என்று கூறும் திரு. பொன்னம்பலம், தமிழ் பேசும் மக்களுக்கு ஓரளவு பிரதே…

யாழ். மாநகர சபையில்

# மீண்டும் பழைய கதைதானா? அன்றிபுதியகதைதொடங்குமா?

யாழ். மாநகராட்சித் தேர்தல் முடிவுகள் மீண்டும் பழைய குருடி கதவைத் திறவடி என்ற கதையாகி விட்டது. நடைபெற்ற தேர்தலின் போதாவது, வாக்காளர்கள் மாநகராட்சியின் கடந்தகால அலங்கோலங்களை உணர்ந்து, அவ்வலங்கோலங்கள் எதிர்காலத்திலும் நிகழாதவாறு தடுக்கக் கூடியவர்களை - ஒரே கட்சியாக இயங்க கூடியவர்களை - தேர்ந்தெடுப்பார்கள் என்று நாடு முழுவதுமே எதிர்பார்த்திருந்தது. நாமும் இப்பத்திரிகையில் பலமுறை வாக்காளர்களுக்கு பன்னிப் பன்னி எடுத்துக் கூறியிருந்தோம். ஆனால் நடந்திருக்கும் கதையோ வேறாக இருக்கிறது. மீண்டும் சுய—இச்சைகளையே பெரும்பான்மையாக யாழ் வாக்காளர்கள் மாநகராட்சிக்குதேர்வுசெய்துள்ளனர்.

எதிர்காலத்திலும், யாழ். மாநகராட்சியில் பழைய கதையே தொடருமானால், அதற்கு யாரையும் நொந்து பயனில்லை. யாழ். வாக்காளர்கள் தங்களைத் தாங்களே நொந்து கொள்ள வேண்டியதுதான்.

இத்தேர்தலில் போட்டியிட்ட 19 தமிழரசு ஆதரவு வேட்பாளர்களில் 6 பேர் வெற்றியீட்டியிருக்கின்றனர். இந்த ஆறு பேரையும் தெரிவு செய்த வட்டாரங்களின் வாக்காளர்களுக்கு எமது பாராட்டுக்களைச் சமர்ப்பிக்கின்றோம். எவ்வித ஆசாபாசங்களுக்கும் இடம் தராது யாழ். மாநகரம் சீரும் சிறப்பும் பெற்றுத் திகழ வேண்டும் என்ற ஒரே நோக்குடன் — அரசியற் தெளிவுடன் இவ்வட்டாரங்களிலுள்ள வாக்காளர்கள் நடந்துகொண்டுள்ளனர்.

இத்தேர்தலில், தமிழரசுக் கட்சிவேட்பாளர்களை நிறுத்தியது, அலங்கோல ஆட்சி நடைபெற்று வந்த யாழ். மாநகரத்துக்கு ஒரு சீரான நிர்வாகத்தை ஏற்படுத்தலாம் என்ற தொண்டுள்ளத்துடன்தான். ஆனால் வாக்காளர்களோ, அவ்வகையில் சிந்திக்கத் தவறிவிட்டனர்.

இதனால் தமிழரசுக் கட்சிக்கு எவ்வித இழுக்கும் கிடையாது. ஏனெனில் மாநகராட்சித் தேர்தல் பாராளுமன்றத்தேர்தலைப் போன்றதல்ல. திட்டவட்டமான அரசியற் கொள்கையொன்றை வைத்து நடைபெறுவது பாராளுமன்றத் தேர்தல். மாநகராட்சித் தேர்தலோ நம் நாட்டில் உள்ளூர் பிரச்சினைகளையும், தனிப்பட்ட கோபதாபங்களையும் தனிப்பட்ட செல்வாக்கையும் வைத்தே நடைபெறுகின்றன. எனவே மாநகராட்சித் தேர்தலில் கிட்டும் வெற்றி தோல்விகள் ஒரு அரசியற் கொள்கைக்கு கிடைத்த வெற்றி தோல்வியென்று எந்த மடையனும் கூறமாட்டான்.

எப்படியிருந்த போதிலும் யாழ். மாநகராட்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் புதிய நகர பிதாக்கள், மீண்டும் பழைய கதைகளையே தொடராது புதியதோர் அத்தியாயத்தை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

# பலப்பிட்டியாவில் நடக்கும் பலப்பரீட்சையில் இறுதி வெற்றியாருக்கு?

அரசாங்கத்துக்குப், கூட்டுக் கட்சிகளுக்குமிடையேயான "இறுதிப் போரான" வேலைநிறுத்தம் இழுபறிப்பட்டு வருகையில், டிசம்பர் 17ம் திகதி இரண்டு இடைத் தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன. இவ்விடைத் தேர்தல்களில் வேலைநிறுத்தப் பிரச்சினையே முக்கிய தேர்தல் பிரசாரமாக விசுவரூபம் எடுக்கப்போகிறது. நாட்டு மக்கள் அனைவரதும் கண்களும் இவ்விடைத்தேர்தல் பக்கம் திரும்பியிருக்கின்றன.

இடைத் தேர்தல் நடைபெறவிருக்கும் தொகுதிகளில் ஒன்று வெலிமடை; மற்றது பலப்பிட்டியா. இரண்டு இடைத் தேர்தல்களும் ஒரே நாளில் நடைபெறவிருந்தாலும் — பலப்பிட்டியாவே அதிக கவனத்துக்குள்ளாகியிருக்கிறது.

கூட்டுக் கட்சிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையேயான ஓர் "கௌரவப் போராக" இது கருதப்படுவதால், இதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

1964ம் ஆண்டு டிசம்பர் 3ம் திகதி கூட்டரசாங்கத்தை வீழ்த்துவதற்கு காரணமாக இருந்தவர்களில் ஒருவரான லக்ஸ்மன் டீ சில்வா பலப்பிட்டியாவில் ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிடுகிறார். எனவே அவரை வீழ்த்தி சமசமாஜ வேட்பாளருக்கு வெற்றி தேடிக் கொடுப்பதில் சுதந்திரக் கட்சி தனிக் கவனமெடுத்து மும்முரமாகவேலை செய்து வருகிறது.

திரு. லக்ஸ்மன் டீ சில்வாவை இப்பிரச்சினை மீது எப்படியும் மன்னிப்பதற்கு சுதந்திரக் கட்சியினர் தயாராக இல்லை.

இதுமட்டுமன்று: பலப்பிட்டித்தேர்தல் ஒரே சமூகத்தைச் சேர்ந்த செல்வாக்குடைய இருவருக்கிடையேயான போட்டியென்பதும் குறிப்பிடத்தக்கது. சிங்கள இனத்திலுள்ள சலாகம சமூகத்தினரே இத்தொகுதியில் பெரும்பான்மையோர்.

இச்சமூகத்தின் ஒரு பகுதியினரால் காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா முடிசூடா மன்னராகக் கருதப்படுகிறார். ஆகவே இத்தேர்தலில் போட்டியிடும் யூ. என். பி. வேட்பாளர் தாம் திரு. சி. பி. டி. சில்வாவின் உண்மையான தொண்டர் என்று வாக்காளர்களிடம் பிரசாரம் செய்துவருகிறார்.

சமசமாஜ வேட்பாளர் திரு. டி. பி. டபிள்யூ. டீ. சில்வாவும், குறித்த சமூகத்தினரால் பெரிதும் மதிக்கப்படும் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் பெருமைக்குள் தன்னை மறைத்துக்கொள்ளக்கூடும். அத்துடன், டி. பி. டபிள்யூ. சில்வா, டாக்டர் கொல்வினின் மருமகன். பலப்பிட்டியா நீதிமன்றத்தில் சட்டத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்.

இரு வேட்பாளர்களும் தொகுதிக்கு தொடர்பற்ற வெளியூர்க்காரர்களல்ல. எனவே இருவரும் சரிசமமான பலமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

அரசாங்கமும் சரி, கூட்டுக் கட்சிகளும் சரி வெலிமடையைவிட பலப்பிட்டியாவில் அதிக கவனமெடுத்து வருகின்றன.

(9-ம் பக்கம் பார்க்க)

சுயாட்சியைத் தரக்கூடிய மாவட்டசபைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு தமிழரசுக்கட்சி எடுத்த முயற்சிகளையெல்லாம் தவிடுபொடியாக்குவதற்கு படாதபாடு பட்டதேன்?

தமிழரசுக்கட்சியினர் கடந்த 20 ஆண்டுகளாக எடுத்துக் கூறிவரும் அரசியற்கருத்துக்களை ஒவ்வொன்றாகத் திருடி தமது கருத்துக்கள் போல வெளியிட்டு அரசியல் வியாபாரம் நடத்தமுயலும் திரு. பொன்னம்பலம், வரட்டுக் கௌரவத்தையும், வீண் ஜம்பத்தையும் கைவிட்டு சமஷ்டிக் கொள்கையையும் உடனடியாக ஒப்புக் கொள்ள முன்வர வேண்டும் எனத் தமிழ் பேசும் மக்கள் சார்பில் அறைகூவி அழைக்கிறோம்.

சமஷ்டியே இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களுக்கு வாழ்வளிக்கக் கூடிய மாமருந்து என்பதை உணர்வதற்கு திரு. பொன்னம்பலத்துக்கு மேலும் 20 ஆண்டுகள் தேவைப்படுமென்றால், அவருக்கு நமது ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குவதன்றி [illegible] செய்ய முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "திருப்பி அனுப்பப்படுவதை மலைத்தமிழர் விரும்பவில்லை

## தேயிலைத் தொழில் பிழைக்க இலங்கை மீது பிளாஸ்டிக்கூரை!"

### நியூயார்க் டைம்ஸ் கருத்து!

"இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ், தேயிலை கொழுந்து பறிக்கும் 5 இலட்சம் இந்தியத் தமிழர்கள் இலங்கையிலிருந்து இந்தியாவுக்குத் திரும்பிய பின், இந்த வேலையை இலங்கையர் தொடர்ந்து செய்வதானல், இலங்கையர் மீது மழை பெய்யாதிருக்க, இலங்கைத் தீவுக்கு மேலால் ஒரு பிளாஸ்டிக் கூரை அமைத்தாகவேண்டும். இலங்கையின் உயிர் நாடியான தேயிலைக்கைத் தொழிலைக் காப்பாற்றுவதற்கு இதைத்தவிர வேறு வழியே கிடையாது."

—இவ்வாறு நியூயார்க் டைம்ஸ் பத்திரிகை ஒரு குறிப்பை அண்மையில் வெளியிட்டுள்ளது.

"இலங்கை 5 இலட்சம் பேரை கட்டாயமாக வெளியேற்றுகிறது" என்ற தலைப்பின் கீழ் ஒரு முழுப் பந்தி நீளத்துக்கு நியூயார்க் டைம்ஸ் வெளியிட்டுள்ள இச்செய்திக் குறிப்பில், இலங்கையர் மழையில் நனைந்து கொண்டு தேயிலைக் கொழுந்து கிள்ளுவதற்கு மறுத்து வருகின்றனர் எனவும் கூறப்பட்டுள்ளது.

அச் செய்தி மேலும் கூறுவதாவது:—

'இலங்கையரைப்போலன்றி இந்தியத் தமிழர்கள் மழையென்றும் பாராமல் வேலைக்கு செல்கிறார்கள். அதிலும் இந்திய ஆண்தொழிலாளிகளைவிட பெண்தொழிலாளிகள் அதிகம் திறமைசாலிகள். மழைபெய்கிறதென்று தெரிந்தும், குறித்த நேரத்தில் வேலைக்கு செல்கிறார்கள்.

"இந்தியத்தமிழ்த் தொழிலாளர்கள் போய் விட்டால் தேயிலைக் கைத்தொழில் ஒழிந்தே போய்விடும் என ஓர் ஆங்கில தோட்ட நிர்வாகி கூறியிருக்கிறார்.

'இந்தியத் தமிழர்கள், இந்தியாவுக்கு, தம்மைத் திருப்பி அனுப்புவதை விரும்பவில்லை, ஆனால் இந்தத் தமிழ்த் தொழிலாளர்கள் இலங்கையில் இருக்கும் வரை தங்கள் நலனுக்கு ஆபத்து என்று பெரும்பான்மை பௌத்த சமூகத்தினரை ஒப்புக் கொள்ளச் செய்வதில் அத்தீவின் அரசியல் வாதிகள் வெற்றி பெற்றுள்ளனர்" — இவ்வாறு அச் செய்தி கூறுகிறது.

# கதைக்கும் சிறுகதைக்கும் பேதம் புரியாமல் தமிழ் மலர் ஆசிரியர் கதை அளக்கிறார்!

## நூலில் இடம் பெற்றுள்ள போலி மணிப்பிரவாள நடை!

### தமிழ்மலர்-9ம் வகுப்பு ஆய்வுரை—4

**ஆசிரியர். க. இராமலிங்கம்**

"வெளிநாட்டிலுள்ள ஒருவனுக்குச் சொந்தஊரைப்பற்றி நண்பனொருவன் எழுதிய கடிதம் எவ்வாறமைய வேண்டுமென்பதைப் பின் வரும் கடிதம் எடுத்துக் காட்டும் (பக் 12). இவ்வாக்கிய அமைப்புப் பிழையானது. "எழுதிய கடிதம்" என்பது எழுதும் கடிதம்என்றிருத்தல் வேண்டும். அன்றேல் "எழுதிய கடிதம்எவ்வாறு அமைந்திருக்குமென்பதை" என்ருகுதலிருத்தல் வேண்டும்.

உதாரணக் கடிதத்தை வாசித்த பின் (பக் 12, 13, 14,) இந்த வாக்கியம் மலைவினை உண்டாக்குகிறதென்பதை எவரும் கூறுவர். வெளிநாட்டிலுள்ள ஒருவனுக்கு நண்பனொருவன் தன்னுடைய ஊரைப்பற்றி எழுதிய கடிதம் என்றுதான் கடிதத்தை வாசிக்குமுன் எவரும் கருதுவர். ஆனால் கடிதத்தை வாசித்த பின் தன் ஊரைவிட்டு வெளிநாடு சென்றவனுக்கு அவனுடைய ஊரிலுள்ள நண்பன் தங்கள் ஊரைபற்றி எழுதிய கடிதம் என்று அறிவார்கள்.

#### உபதேசம் ஊருக்குத்தான்

'இடமும் திகதியும் குறிக்க முன்னர்த் தமது சமயத் தெய்வத்தின் வணக்கக் குறியீட்டைக் காகிதத்தின் மேற்புறமத்தியில் இடுக. சமயங்கள் எல்லாம் உயர்ந்த வணக்கக் குறியீடுகளையுடையன அவை யிட்டுத் தொடங்கும் முறைமை வழி வழியாக வரும் பண்பாடாகும். (பக் 10) ஆசிரியர் தாம் எண்ணியதை இவ்வாக்கியங்களில் திருகி முறுக்கித் திக்கிடுக்காடிப் புகுததியுளர். 'உயர்ந்த வணக்கக்குறியீடுகள்' எனும் தொடர்பில் உயர்ந்த எனும் அடை தாழ்ந்த வணக்கக் குறியீடுகளைப் பிரிக்கின்றனவா? அற்றாயின், தாழ்ந்த வணக்கக் குறியீடுகள் யாவை? 'வணக்கக் குறியீட்டை இடுக' என மாணவரைப் பணித்த ஆசிரியர் தாம் படைத்துக் காட்டிய உதாரணக் கடிதத்தில் வணக்கக் குறியீட்டை இட்டுக்காட்டாததேன்? 'ஊருக்குத் தான் உபதேசமா?"

#### பிறமொழியில் எண்ணுகிறாரா?

"அலுவலகக் கடிதமும், வணிகமுறைக் கடிதமும் அமைப்பில் வேறுபடும். அவற்றை மனதிற்கொண்டு கருத்தை அமைத்தல் வேண்டும். செய்தித்தாளுக்கெழுதுங் கடிதம் இன்னும் வேறுபடும் (பக் 11). இன்னும் வேறுபடும் என்பது ஆசிரியர் தாம் கருதியதைத் தெளிவாக உரைக்க முடியாதவர் என்பதை நன்கு காட்டுகின்றது "செய்தித் தாள்" என்று தொடங்கிய ஆசிரியர் பொருத்தமான எக்காரணமுமின்றி அதனைப் பத்திரிகையென மாற்றி முடிக்கின்றார் (பக் 11, 15). கடிதம் (பக் 14) அறிக்கையாக மாறுகின்றது (பக் 15).

"நாடகம் ஒன்று நிகழ்ச்சிகளில் இடம் பெறுமல் அதைப் பற்றியே [illegible] கொண்டு இருந்தால் [illegible] அறிக்கை முழுமையுடையதாக இருக்கமாட்டாது" (பக் 15). 'எழுதிக் கொண்டிருந்தால்' அறிக்கை முடிவடையுமா?' இத்தகைய பொருந்தாக வாக்கிய அமைப்புகள் ஆசிரியர் தமிழ் மொழியில் எண்ணுகிறாரா பிறமொழியில் எண்ணித் தம் எண்ணங்களைத் தமிழிற் பெயர்க்கின்றாரா என்ற ஐயத்தைத் தோற்றுவிக்கின்றன.

#### போலி மணிப்பிரவாள நடை

"நாம் நலமுடையோம்" "உழுவலன்பன்" "சொற்பொழிவு" என்பன போன்ற செந்தமிழ் மணங்கமழும் தொடர்களைக் கையாளும் ஆசிரியர் மித்திரர், விநாயகராலயம், பள்ளிக்கூடம், உபாத்தியாயர், அப்பியாசங்கள, சஞ்சிகைகள், வருடங்கள், வித்தியாசம், பிரசங்கம், சனங்கள், தினம், வருடாந்தம், சங்கீதம் முதலிய சொற்களைப் புகுத்தித் தம் கடிதத்தைப் போலி மணிப்பிரவாள நடைக்கு நல்லதோர் உதாரணமாக்கியுளார்.

"கீழ்க்குறித்தவாறு கடிதம் வரைக" (பக் 15)என்ற பொதுப்பணிப்புரை 2 ஆம் 3ஆம் 4 ஆம் 5ஆம் பயிற்சிகளுடன் இசையாது என்பதை மாணவர்களும் எளிதில் அறியலாம்.

5. கல்லூரிப் பரிசளிப்பு விழாப்பற்றிய வருணனை குறித்து நண்பனுக்குக் கடிதம் எழுதல் என்பது முதலிற் கொடுத்த பொதுப்பணிப்புரையுடன் இசையவேண்டுமெனின் "கல்லூரிப் பரிசளிப்பு விழாபற்றிய வருணனை குறித்து நண்பனுக்கு' [illegible] அமைத்தல் [illegible] [illegible] விழாவினை வருணித்து' என்ச் சுருக்கியுரைப்பின் சொற்சுருக்கமும் பொருட்டெளிவுமுடையதாயிருக்கும்.

ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ஊரைப்பற்றிய கடிதத்திற்கு உதாரணம் காட்டவேண்டியதில்லை. ஏழாம் எட்டாம் வகுப்புக்களில் இதனை நன்குபயின்றேயிருப்பர். 'அலுவலகக் கடிதம் வணிகமுறைக் கடிதம்" என்பனவற்றுக்கு உதாரணம் காட்டியிருத்தல் வேண்டும்.

#### பஞ்சதந்திரப் பற்று

சிறுகதைஎழுதுதல் எனும் பகுதியினை இனி நோக்குவோம். கடிதம் எழுதுதற் பகுதியை எழுதிய ஆசிரியரின் உரைவண்ணத்தையும் உளப்பாங்கினையும், பஞ்சதந்திரப்பற்றையும் இப்பகுதியிலும் நன்கு காணலாம்.

"சிறுகதை எழுதுதல்" எனும் பகுதி சிறுகதையைப் பற்றிக் கூறவில்லை. கதை எழுதலைப் பற்றித்தான் கூறுகின்றது. பஞ்சதந்திரக் கதைகள் சிறுகதைகளா? நரியும் காகமும், நரியும் திராட்சைப்பழமும், குரங்கும் புலியும் முதலிய கதைகளைச் சிறுகதைகள் என்று இக்காலத்தில் கூறுபவர்களை 'அங்கொடைக்' குத்தான் அனுப்பவேண்டும்.

#### குருடன் குருடனுக்கு வழிகாட்டல்

கதை எழுதுதலை மூன்றும் வகுப்பிலிருந்து மாணவர்கள் பயில்கின்றார்கள். நரியும் திராட்சைப்பழமும் போன்ற கதைகளை முதலாம் வகுப்பிலேயே மாணவர்கள் படிக்கின்றார்கள். ஆறும் ஏழாம் எட்டாம் வகுப்புகளுக்குரிய தமிழ் மலர்களில் "கதை எழுதல்" எனும் பகுதிகள் முறையாகவும் தெளிவாகவும் நன்கு எழுதப்பட்டுள. ஆனால் இம்மலரில் சிறுகதை எழுதுதல் பற்றி எழுதிய ஆசிரியருக்குச் சிறுகதைகளுக்கும் பிற கதைகளுக்குமுள்ள வேறுபாடும், சிறுகதையின் அமைப்பு முறையும் தெரியவில்லை'குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதைப்' போல இப்பகுதியை ஆசிரியர் எழுதியுளர்.

பஞ்சதந்திரக்கதைகளை ஆறும் ஏழாம் எட்டாம் வகுப்புத் தமிழ் மலர்களில் மாணவர்கள் பயின்றுளர். எனவே அக்கதைகளை மீண்டும் பயிற்றவேண்டியதில்லை. சிறந்த சிறுகதைகள் நூற்றுககணக்கில் உள. இவற்றில் ஒன்றினையாகுதல் உதாரணமாகக் காட்ட ஆசிரியர் எண்ணவில்லை.

#### எடுத்தது ஒன்று தொடுத்தது ஒன்று

"ஆசிரியர் சில கதைகளை வாசித்து அவற்றைத் திருப்பி எழுதுமாறு மாணவர்களுக்குக் கூறலாம். முதலில், அக்கதைகளை வகுப்பிலே மாணவரைக்கொண்டு திருப்பிச் சொல்லுவிப்பது நல்லபயிற்சியாகும் பஞ்சதந்திரம், இதோபதேசம முதலிய பழைய கதை நூல்களையும் வியாசர் விருந்து, சக்கரவர்த்தித் திருமகன், கந்தபுராணம் முதலிய நூல்களையும் வாசிக்கச் செய்யலாம். பழைய இதிகாசங்களிலே வரும் நிகழ்ச்சிகளைப் புதிய முறையிற் சிறுச் சிறுக்கதைகளாகப் புனைவிக்கலாம். உதாரணமாக இராமனைத் தசரதர் காட்டுக்குப்போக

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சிப் பட்டினசபைக்கு [illegible]

## சுயேச்சைகளால் தலைவரை பறி[illegible]

கிளிநொச்சிப் பட்டின சபையில் மூன்று தமிழரசு உறுப்பினர்களும் நான்கு சுயேச்சைகளும் இருக்கின்றனர். தமிழரசு உறுப்பினர் திரு. ச. கந்தையா நான்கு உறுப்பினருடைய வாக்குகளைப்பெற்றுத் தலைவரானார். உயர்நீதிமன்றத் தீர்ப்பின் படி பதவிகளை இழந்த மூன்று சுயேச்சைகள் இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு உறுப்பினர்களாயினர்.

"ஐந்து மாதம் மட்டுமே உறுப்பினராயிருந்தோம். அநியாயமாக எங்களை அகற்றிவிட்டார்கள். மீண்டும் போட்டியிடமாட்டோம். இம்முறை எங்கள் மானத்தைக் காப்பாற்றுங்கள். நாங்கள் தோற்றால் பொலிடோல் தான் குடிப்போம். இந்தத் தற்கொலைப் பழி உங்களுக்குத்தான். இங்கு வந்து உங்களுக்குச் சேவை செய்து மனைவியை இழந்தோம், பிரமச்சாரிகளாக இருக்கிறோம். அடுத்தடுத்துத் தேர்தலில் மண் கவ்வினோம். வெறுங்கையுடன் திரும்பி அனுப்பாதீர்கள்" என்று கண்ணீர் சிந்தி இரந்து வெற்றி பெற்றது கிளிநொச்சி மக்களுக்குத் தெரியும்.

### சிங்கள வாக்குகள்

புத்தபிக்குஒருவரின் துணையுடன் சிங்களவர்களின் வாக்கு முழுவதையும் (நூற்றுக்குமேல்) பெற்றுர்கள். "அரசாங்கத்தை விட்டு விலகிவிட்டது தமிழரசுக் கட்சி; அதற்கு வாக்களித்து என்ன பயன். நாங்கள் அரசாங்கத்தை ஆதரிக்கிறோம் உங்களுக்குத் தேவையானவற்றையெல்லாம் பெற்றுத் தருவோம்" என்று மக்களை மயக்கினர்கள். "இடதுசாரி என்ற பழைய லேபலைக்காட்டி மயக்கிச் சிறுபான்மைத் தமிழரின் வாக்குகளைப் பெற்றுர்கள்.

"தொழிலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சும் முதலாளிமார்" என்று துண்டுப்பிரசுரங்களை முன்னர் வெளியிட்ட இடதுசாரித்தோழர் ஆனந்தசங்கரி முதலாளிமாருடைய கட்சியான காங்கிரசிற் சேர்ந்து முதலாளிமாருடைய உதவியை நன்கு பயன்படுத்தினர் என்பது பகிரங்க ரகசியம்.

ஏழை மக்களுக்கே கொடுக்கப்படவேண்டிய அரசாங்கக் காணியை அடாத்தாகப் பிடித்து, கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினரின் விடாமுயற்சியால் பெற முடியாமல் தவித்த முதலாளிமாரும், களிப்புகள் என்ற போர்வையில் கள்ளச் சாராயம் விற்ற நிலையங்களை மூடி விடுதற்குப் [illegible]

[illegible]

---

## பிரவேசப் பத்திரம்

ஒவ்வொரு சொல்லையும் மிகக் கவனமாகப் படித்துவிட்டு பிரவேசப் பத்திரத்தை வெட்டிப் பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். பிரவேசப் பத்திரங்களைப் பெற்றுக்[illegible] கஷ்டமாகலாம்.

### கட்டுரை-எலிபன்ட் ஹவுஸ் பற்றிய சில உண்மைகள்.

75 ஆண்டு நிரம்பப் பெற்ற வர்த்தகஸ்தாபனமாகிய சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்டின் தலைமைக் காரியாலயந்தான் எலிபன்ட் ஹவுஸ். இந்த வர்த்தகஸ்தாபனத்திற்குக் கண்டியிலும் திருகோணமலையிலும் கிளைகள் உண்டு. பௌண்டன் கபேயும், நெல்தெனியாவில் விக்டோரியா எஸ்டேட்டிலுள்ள இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறைக் கால்நடைப் பண்ணையும், இந்த ஸ்தாபனத்திற்குச் சொந்தமானவை. (யானை மார்க் குளிர் பானங்கள் மிக முக்கியமாகப் பலரும் விரும்பும் ஒறேஞ்ஜ் பார்லி (orange barley)—உயர்ந்த ரகத்திற்கும், சுத்தத்திற்கும் பெயர் பெற்றவை.) இந்த ஸ்தாபனத்தின் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம் இலங்கையிலுள்ள மிகப் பெரியதும் மிகச் சிறந்ததுமாகும். ஆகவே அதன் சோடா (soda) மிக உயர்ந்ததென ஏற்றுக்கொள்ளப்படுதல் இயல்பே. லெமனேட் (lemonade) போன்ற- அது இப்பொழுது கூடிய இனிப்புடன் வருகிறது. யானை மார்க் குளிர் பானங்கள் எப்பொழுதுமே பெரிய போத்தல்களில் வருவதால், சிக்கனமான குடும்பப் பெண்கள் அவற்றைப் பெரிதும் விரும்புகிறார்கள். அவர்கள் பேயாவ (peyawa) வையும் இப்பொழுது வீட்டில் கைவசம் வைத்திருக்கப் பழகிவிட்டார்கள். காரணம், சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட இந்தக் குளிர்பானம் கடிமல், இருமல், தலைவலி, தேக உளைச்சல், காய்ச்சல் முதலியவற்றிற்குரிய ஆயுள்வேத ஔடதங்களைக் கொண்டிருக்கிறது என்பதே:

எலிபன்ட் ஹவுஸ், போத்தல்களிற் பால்-அடைப்பதற்கான பிரமாண்டமான இயந்திரத்தை வைத்திருப்பதோடு, உயர்தரக பழரசங்களையும் தயாரிக்கிறது: ஒரேஞ்ச், (orange) பிளாக் கரண்ட் (blackcurrent) லெமன், (lemon) கிறேப்புறுற், (grapefruit) பஷன், (passion) முதலியனவும், லங்காலைம், (lanka-lime) லைம் ஜூஸ் அன்ட் சோடா (limejuice & soda) ஆகியன செய்வதற்கான எலுமிச்சையும் இதில் அடங்கும். மற்றும் இருபதிற்கதிகமான சுவைகளில் எலிபன்ட் ஹவுஸ் ஐஸ்கிறீம் வெளியாகின்றது. இவை மிகவும்சுத்தமும் உயர்ந்த போஷாக்குமுடையனவென்று மதிக்கப்படுகின்றன; இவற்றுடன் பத்து சதத்திற்கு விற்பனையாகும் ஐஸ்பழம், அண்மையில் சேர்க்கப்பட்டுள்ளதொன்றாகும். தேனினுமினிய கால்டன்-சிறப் (golden syrup) மற்றொரு புதிய எலிபன்ட் ஹவுஸ் தயாரிப்பு. வயது வந்தோர் தமது குடிபானங்களோடு கலந்து உட்கொள்ள யானை மார்க் ரொனிக், (tonic) ட்றை ஜின்ஜர் ஏல், (dry ginger ale) ஆகியவற்றையே குறிப்பிட்டுக் கேட்கிறார்கள். பெண்கள் மத்தியில் பெரிய மதிப்புப் பெற்றுள்ளவை.

பிற்றர் லெமன் (bitter lemon) புதிய சீனிக் கலப்பற்ற, [illegible] ஸ்லிம்-லைம் (slim lime) ஆகியன;

[illegible]

இங்கே இப்பொழுதே கத்தரியுங்கள்.

### கறுப்புப் பந்தி

காலியான சதுரங்களை இடமிருந்து வலமாக ஆங்கிலத்தில் நிரப்புங்கள். ஒவ்வொரு பந்தியிலும் எமது பல்வேறு இனங்கள் அனைத்தும் இருக்கின்றன

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | D | | ■ | ■ | | | | | J | | | | | | | | | |
| | | | T | | ■ | ■ | ■ | | | | | | | | E | | | | |
| | E | | | | | ■ | ■ | ■ | | | | K | | | | | | | |
| | | | | | A | | | ■ | ■ | | | | G | | | | | | |
| | | | | A | | | | | ■ | ■ | | | | | | | O | | |
| | | T | | | | | | | | | ■ | | | I | | | | | |
| | | | | G | | | | | | | | ■ | ■ | ■ | | O | | | |

### சிகப்புப் பந்தி

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | | | | | | | | | | | | ■ | | | C | | |
| | | | | | | B | | | | | | ■ | ■ | | | Y | | | |
| | | N | | | | | | | | ■ | ■ | | | | | | | D | |
| | | | | | S | | | | ■ | ■ | | | | | | L | | | |
| | L | | | | | | | ■ | | | | | | | | | M | | |
| | | N | | | ■ | ■ | ■ | ■ | | | | | | | R | | | | |
| | | D | | ■ | ■ | ■ | ■ | | | | | | | | | R | | | |

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட், அதன் அனுமதிபெற்ற வியாபாரிகள், இரூன்ட் அட்வரைஸிங் (இலங்கை) லிமிட்டெட், பூனவோஸல் மெற்றல் கிறௌன்கோர்க் கம்பனி, ஆகியவற்றைச் சேர்ந்த ஊழியர்களும் அவர்களது குடும்பத்தவர்களும் இப்போட்டியிற் கலந்து கொள்ளமுடியாது.

● இப்போட்டி முடிவுகள் பற்றி எவ்வித கடிதத் தொடர்பும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எலிபன்ட் ஹவுஸ் — சிலோன் கோல்ட் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட் நிர்வாகஸ்தர்களின் தீர்ப்பே முடிவானது.

மேலே கொடுக்கப்பட்டுள்ள கட்டுரையில் வரும் யானை மார்க் குளிர்பான வகைகளின் தமிழ் பெயர்களின் ( ஆங்கிலத்தை அல்ல ) கீழே கோடிட்டுவிட்டீர்களா? கோடிடாவிடில் நீங்கள் தகுதியை இழக்க நேரிடும்.

போட்டியாளரின் பெயர் ....................

விலாசம் ....................

18 வயதுக்குட்பட்டவர் (அ) வயது ....................

(ஆ) பாடசாலை ....................

உங்களுடைய வாடிக்கையான விற்பனையாளர் பெயர் ....................

விலாசம் ....................

**எலிபன்ட் ஹவுஸ்**

CCS

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்,

கொழும்பு — கண்டி — திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வந்துற்ற "நோய்" என்ன?
# ...வி நீக்கம் செய்ய முடியுமா?

...ப் பொலிசார் நட... எடுத்தமையால் ...டைந்த கிளப்புக் ...ம் சுயேச்சைகளு ...முராமாக உதவி ...கள்.

### ...ப் பிரச்சாரம்

...ாட்சித் தேர்தலில் ...ப்புகுத்தப்படாது; ...ன் சுயேச்சை ... வந்தோம் என ...ில் வாய் கிழியக் ...ள். கடைக்காரர், ...ர், தியேட்டர் காரர் முதலாளேருடைய பணம் கிடைக்கும்போது இடையிடையே இவர்கள் வெளியிடும் ஒரு மஞ்சள் பத்திரிகையிலும் இந்தக் கருத்தை வெளியிட்டார்கள்.

பொய்ப்பிரசாரம் செய்து தொழிலாளிகளைச் சுரண்டும் முதலாளிகளின் பணத்தைச் செலவுசெய்து, கள்ளச்சாராயம் விற்ற கிளப்புக்காரர் ஆதரவுடன், புத்த பிக்குவின் ஒத்தாசையுடன், மக்களுக்கு உபத்திரவஞ் செய்ததால்வெளியே அனுப்பப்பட்ட சில அரசாங்க உத்தியோகத்தரின் உதவியையும் பெற்று, பழைய இடதுசாரி லேபலையும் பாவித்து, மீண்டும் வந்து நிற்கும் எங்களுக்கு மீண்டும் ஒருமுறை உதவுங்கள் என்று இரந்து கேட்டு, முன்வென்ற தங்கள் "சிற்றுக்களை"ப் பிடித்துக்கொண்டவுடன் இந்தச் சுயேச்சைகள் அ. இ. தமிழ்க் காங்கிரசுக் கட்சி, வென்றுவிட்டது என்று கொக்கரிக்கின்றார்கள். இதைவிட இந்த உலகிலே பெரிய ஏமாற்றுவித்தை வேறு உண்டா?

இவர்கள் வென்றவுடன் பட்டினசபைத் தலைவர் திரு. கந்தையாவுக்கு வாக்களித்து ஆதரித்த தோழர் ஒருவர் இவர்களுடன் சேர்ந்துவிட்டார். இப்போது கிளிநொச்சிப் பட்டின சபையிலே தமிழரசுக் கட்சியை காங்கிரசு எதிர்க்கின்றது என்று காங்கிரசுக்கு போலிப் பெருமை தேடப் பத்திரிகைகளிலே பொய்ப்பிரசாரம் செய்கிறார்கள் இந்தச் சுயேச்சைகளும் இவர்களுடைய தரகர்களும். இவர்களிற் பலர் இன்னும் சுயேச்சைகளாகத்தான் இருக்கின்றார்கள். காங்கிரசுக் கட்சியிற் சேரவில்லை.

### தலைவரை நீக்க முடியுமா?

காங்கிரசு லேபல்போட்டு போட்டியிடத் திராணியற்ற இவர்கள் — போட்டியிட்ட

(9-ம் பக்கம் பார்க்க)


## யானை மார்க் குளிர்பானப் போத்தல்-மூடிப் போட்டி

இரண்டாங் கட்டம்

ரொக்கப் பரிசுகளாக ரூ.75,000/-க்குமதிகமான தொகை!

பிரவேசியுங்கள்: போத்தல்-மூடிப் போட்டியில்

முந்துபவர்களுக்கு மிகச் சிறந்த பயன்!
இந்த வரிசைப்படி ரொக்கப் பரிசுகளை வெல்லுங்கள்!
1ஆம் பரிசு — ரூ. 1,500/-, 2ஆம் பரிசு — ரூ. 1,000/-, 3ஆம் பரிசு — ரூ. 750/-,
4ஆம் பரிசு — ரூ. 500/- 5 ஆம் பரிசு ரூ. 350/-
மற்றும் பின்னர் பிரவேசிப்போருக்கென ரூ. 200/- வீதம் 245 பரிசுகளும்!
விற்பனையாளருக்கு ரூ. 50/- வீதம் 250 பரிசுகளும உண்டு!

இவைமட்டுமல்ல!
50 பாடசாலைகள் இலவசமாக விளையாட்டு உபகரணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்!
விளையாட்டு உபகரணங்கள் வாங்கக்கூடியதாக டயஸ்/சான்ட்ஸ் ஸ்தாபனத்தவர் அளிக்கும், ஒவ்வொன்றும் ரூ. 200/- பெறுமதியான வவுச்சர்களைத் தத்தமது பாடசாலைகளுக்கு, வெற்றிபெறும் 18 வயதிற்குட்பட்ட முதல் 50 மாணவர்கள் பெற்றுக் கொடுக்கலாம்.

### போட்டியில் பிரவேசிக்கும் முறை

1. பிரவேசப் பத்திரத்திலுள்ள கட்டுரையைக் கவனமாகப் படித்து, அதில் வரும் எல்லா யானை மார்க் குளிர்பான வகைகளின் (தமிழ்) பெயர்களின் (ஆங்கிலத்தை அல்ல) கீழே கோடிடுங்கள்.

2. வழிகாட்டியாக ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை உபயோகித்து, கோடிட்ட பெயர்களால் பிரவேசப் பத்திரத்தின் இரண்டு பந்திகளையும் நிரப்புங்கள்.

3. அடுத்ததாகப் பின்வருவனபோல யானை மார்க் போத்தல் மூடிகளை ஒவ்வொரு பந்தியிலுமுள்ள எழுத்துக்களுக்கேற்றதாகச் சேகரியுங்கள்:—

கறுப்புப்பந்தியில்:— நீங்கள் நிரப்பியுள்ள எழுத்துக்களுக் கேற்பக் கறுப்பு எழுத்துள்ள மூடிகளையும், ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ள வழிகாட்டி எழுத்துக்களுக்குரிய சிகப்பு எழுத்துள்ள மூடிகளையும் சேகரியுங்கள்.

சிகப்புப்பந்தியில்:— நீங்கள் நிரப்பியுள்ள எழுத்துக்களுக் கேற்பச் சிகப்பு-எழுத்துள்ள மூடிகளையும், ஏற்கனவே அச்சிட்டுக் கொடுக்கப்பட்ட வழிகாட்டி எழுத்துக்களுக்குரிய கறுப்பு-எழுத்துள்ள மூடிகளையும் சேகரியுங்கள்.

குறிப்பு:- இந்தச்சிகப்பு கறுப்பு எழுத்துக்கள் யானை மார்க் போத்தல் மூடிகளில், தக்கைக்குக் கீழே உள்ள தகட்டில் அச்சிடப்பட்டுள்ளன. சில போத்தல் மூடிகளில் எழுத்துக்களில்லை - அவை தேவையற்றவை ஆனபடியால் வீசப்படலாம்.

4. முழுத்தொகையான 248 சிகப்பு, கறுப்பு எழுத்துக்களுள்ள போத்தல் மூடிகளை நீங்கள் சேர்த்தவுடன், நீங்கள் நிரப்பிய பிரவேசப்பத்திரத்துடன், அவற்றை சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்; எலிபன்ட் ஹவுஸ் விற்பனை/விளம்பர மனேஜரிடம் எடுத்து வாருங்கள்.

முதலில் வருபவருக்கு முதற்பரிசும், அடுத்தடுத்து வருபவர்களுக்கு அடுத்தடுத்த பரிசுகளுமாக வழங்கப்படும். இந்தப் போத்தல் மூடிப் போட்டியிற் பங்குபற்றுபவர்களுக்கென 250 பரிசுகள் வழங்கப்படுகின்றன. மேலே கூறியபடி, வருபவர்களுக்கு அதே வரிசைப்படி இந்தப் பரிசுகள்வழங்கப்படும்

தபால் மூலம் அனுப்பப்படும் பிரவேசப் பத்திரங்கள் ஏற்று கொள்ளப்படமாட்டா.

5. விற்பனையாளர்களைக் குறிப்பிடுதல்

வெற்றி பெறும் ஒவ்வொருவரும் தமது வழமையான யானை மார்க் குளிர்பான விற்பனையாளரைக் குறிப்பிடும் உரிமை பெறுவர். இப்படியாகக் குறிப்பிடப்படும் விற்பனை யாளர் பற்றிய விபரம் ஆதாரமுள்ளதா என்பதும், அவர் பரிசு பெறுபவரின் விலாசத்திலிருந்து எவ்வளவு சமீபத்திலிருக்கிறார் என்பதும் சரிபார்க்கப்பட்ட பின்னர் அவருக்கு ரூ: 50/- பரிசு வழங்கப்படும்.

6. பாடசாலைகளைத் தெரிவு செய்தல்

வெற்றி பெறும் 18 வயதிற்குட்பட்ட முதல் 50 மாணவர்களுக்கு டயஸ்/சான்ஸ் ஸ்தாபனத்தில் விளையாட்டு உபகரணங்கள் வாங்கக் கூடியதாக எலிபன்ட் ஹவுஸ் வழங்கும் ஒவ்வொன்றும் ரூ. 200/- பெறுமதியான வவுச்சர்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாகத் தத்தமது பாடசாலைகளை குறிப்பிடும் உரிமையுண்டு.

அப்படியான மாணவர்கள் அவர்களது வயதை உறுதிப் படுத்தியும், இந்த வவுச்சரைப் பாடசாலை ஏற்றுக்கொள்ளச் சித்தமாயிருக்கிறது என்றும் பாடசாலை அதிபரிடமிருந்து கடிதமொன்றைப் பெற்றுத் தமது பிரவேசப் பத்திரத்துடன் சமர்ப்பிக்கவேண்டும்.

இங்கே, இப்போழுதே கத்தரியுங்கள்

பிரவேசப் பத்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சிறுகதை

# அவனுக்குப் புரிந்தது

பயன்படுத்தும்வரை பயன்படுத்தியவனுக்கு இன்பமளிப்பதற்காகத் தன்னையே அழித்துவிட்டு, தேடுவாரற்ற நிலையில் புகைந்து கொண்டு கிடக்கும் சிகரட் துண்டு ஒன்று, உதவாக்கரை எனப் பலராலும் ஒதுக்கிவிடப்பட்ட அவன் பார்வையில் பட்டது.

நீறு பூத்த நிலையில் புகைந்து கொண்டு கிடக்கும் சிகரட் துண்டைக் குனிந்து எடுத்துக் கொண்டே ''புடிச்சுக்கிட்டன் புடிச்சுக்கிட்டன்'' என்று கத்தியவாறு ஓட ஆரம்பித்தான்.

இந்த உலகில் அவன் எதற்குமே பயப்படாதவன். தெருவிலே செல்லும்போது சிறு சைக்கிள் வண்டியைக் கண்டால் கூட ஒதுங்கி நாம் வழி விடுகின்றோம். ஆனால் அவன் பஸ்ஸிற்கோ, காருக்கோ, லொறிக்கோ, பயப்படமாட்டான். நடுரோட்டில் நிற்கும் அவனைக் கண்டு வாகனங்கள் விலத்திக் கொண்டு போகும். அவைகள் அப்படிச் செல்வதைக் கண்டு ஏதோ புரியாத மொழியில் பேசிச் சிரிப்பான் அவன்.

சட்டம் கூட அவனைக் கண்டு பயந்ததே தவிர அவன் சட்டத்தைக் கண்டோ, பொலிஸைக்கண்டோ பயந்தானில்லை.

இடைக்கிடையே கிழிந்து போன நீண்ட காற்சட்டையும், அதேபோன்று கிழிந்து போன சேட்டும், வாய் நிறைய வெற்றிலை பாக்கும், அதிலிருந்து வடிந்த எச்சில்

கே. எஸ். ஆனந்தன்

சட்டையை நனைத்திருக்க, தினமும் யாழ்நகரபிரதான வீதிகளில் வரும் அவன் அப்படிக் கத்திக் கொண்டு ஓடுவது புதுமையில்லையாயினும் பட்டினத்துக்குப் புதிதாக விஜயம் செய்வோர் அவனை ஓர் அபூர்வ பிராணியைப் பார்ப்பது போல் பார்ப்பார்கள்.

எரிந்த சிகரட் துண்டுடன் ஓடிவரும் அவனை வண்ணை சிவன் கோவிலில் எள் ளெண்ணை எரித்துவிட்டு சுருக்கிய குடையைக் கக்கத்துக்குள் வைத்துக்கொண்டு பஸ் நிலையம் நோக்கி வந்த ஒரு வயோதிபா வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றார்.

அவர் அப்படிப் பார்த்துக் கொண்டு நின்றதைப் பொருட்படுத்தாமல் ஓடிச் சென்றவன் போன அதே வேகத்தில் திரும்பி வந்தான். கையில் வைத்திருந்த சிகரட் துண்டை வீசிவிட்டு கக்கத்துக்குள் கிழவன் வைத்திருந்த குடையைப் பிடித்துககொண்டு ''புடிச்சுக்கிட்டன், புடிச்சுக்கிட்டன்'' என்று கத்த ஆரம்பித்துவிட்டான். அவன் அப்படிச் செய்ததை ஒருவாறு சமாளித்து அந்தக் கிழவனையும் விடுவித்தனர் சிலர்.

(2)

இத்தனையையும் பார்த்துககொண்டு நின்ற எனக்கு அவனை விலத்திக்கொண்டு எப்படி அடுத்த கடைக்குப் போவது என்ற பிரச்சினை மனதில் தோன்றியபொழுது ' அவனுக்குக் கூடிவிட்டது. முந்தி இப்படி இல்லை. இப்ப சில நாள் யாரையாவது இப்படித்தான் பிடித்துக் கொண்டு கத்த ஆரம்பித்து விடுகிருன்'' என்று கடை முதலாளி கூறினர்.

''அப்படியா?'' என்று நான் கூறினேன். ஆனால் என்னுள்ளம் பயப்பட ஆரம்பித்தது.

அவனை மூன்று நான்கு வருடமாக நான் யாழ்நகரில் பார்த்திருக்கின்றேன். தானும தன்பாடும் யாருடனும சோலிக்குப் போனது கிடையாது. சன சந்தடி நிறைந்த நேரத்திலும் சரி, இல்லாத நேரத்திலும் சரி வழமையாக கததுவது போல கத்திக்கொண்டு ஓடுவான்; புரியாத ஏதோ பேசுவான். சிரிப்பான். அவன் செயல்களுக்கோ — பேச்சுக்கோ—அர்த்தமேயிருக்காது. அப்படிப்பட்டவன் ''புடிச்சுக்கிடடன்'' என்று புரியக் கூடிய முறையில் ஒரே வார்த்தையைத் திருப்பித் திருப்பிச் சொல்வதும் எதையாவது திடீரெனப் பிடித்துக்கொள்வதும் ஏதோ புரியாதசெயலாக, ஆனால் கருத்துள்ள — விளங்காததுமாக இருந்தது.

அதே வேளையில் ஒரு தாயும்—மகளுமாக அவன நின்றிருந்ததற்குச் சமீபத்தில் வந்துகொண்டிருந்தனர். அதற்கிடையில் ''அம்மா! மற்றப்பக்கத்தாலே போங்கோ'' என்று யாரோ எச்சரிக்கை செய்தனர்.

''நேற்று காலத்தாலே ஆரோ மனுசியைப் பிடிச்சுப் போட்டானும். பிறகு யாரோ பிடிச்சுவிட்டினமாம்'' கடைக்காரர் கூறினர். அவருக்கும் அந்த எச்சரிக்கைக் குரல் கேட்டிருக்க வேண்டும்.

கடையை விட்டிறங்கவே எனக்குப் பயமாக விருந்தது. நடுரோட்டில் வைத்து என்னையும் அவன்......'புடிச்சுக்கிட்டன்' என்று கத்தினுல்? எல்லோரும் பார்த்துச் சிரிப்பது போன்ற பிரமை. ''கம்மா திரிஞ்சான். யாரிடமாவது அடி வாங்கப் போருன்'' என்று அவன் மீது பரிதாபப்பட்டது என் மனம்.

(3)

முட்டாசுக் கடைச் சந்தியில் நின்ற பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு சல்யூட் அடித்துவிட்டு காங்கேசன்துறை வீதியில் பஸ் நிலையம்நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவனுக்காக இரங்கினுலும் அதே வேளையில் அவன் தெருவில் போகும் பெண்களைப் பிடித்து ஏதும்...... என்று அவன மீது ஆத்திரமும் ஏற்பட்டது.

(4)

நாளுக்குநாள் அவனைப் பற்றி செய்தி பலரிடமும் பரவிவிட்டது. அவனைக்கண்டவர்களெல்லாம் ஒதுங்கிச் செல்ல முற்பட்டனர். விசரன்—பைத்தியம் என்ற பெயர் மங்கி 'புடிச்சுக்கிட்டான்' என்ற பெயர் நிலை பெற்றுவிட்டதை அறிந்தேன். தினசரி பட்டணத்தைத் தரிசித்து வரும் எனக்கு இதுபோன்ற செய்திகள் பல கிடைக்கும்.

ஒரு நாள் பஸ் நிலையத்தில் பஸ்ஸிற்காக நின்றிருந்தேன். எனக்கு முன்பாக நான்கு வாலிபர்கள் உலகம் தங்கள கையிலேதான் சுழல்கின்றது என்றளவுக்கு கதையளந்து கொண்டு நின்றனரென்ருல் அவர்கள் எப்படியெல்வாம் கதைத்திருப்பார்கள் என்று விளக்கமாக நான் சொல்லத் தேவையில்லை. அவர்களில் ஒருவன் ''டேய்! கம் திஸ் சைட் புடிச்சுக்கிட்டான் கம்மிங்'' என்று கூறினன்.

அவ்வளவுதான் வாலிபர்கள் எனக்குப் பின்னே ஒதுங்கிக் கொண்டனர். திருவாளர் புடிச்சுக்கிட்டான் அவருக்கே உரித்தான பாணியில் வெற்றிலை பாக்கு குதப்பிய சாரம் இருபக்கக் கடைவாயினுலும் வழிய வந்து கொண்டிருந்தார். அவருடைய யூனிபாரம் அன்று மாற்றப்பட்டிருந்தது.

''இவனுக்கு இந்தக் கால் சட்டை சேட்டெல்லாம் எப்படியடா கிடைக்குது?''

''எப்படியோகிடைக்குது. நமக்கேன் அந்தப் பைத்தியக் கதை'' எனறு அதற்கு ஒரு மேதாவி பதில கூற எனக்குப் பின்னே ஒதுங்கிய வாலிபர்கள் பழைய இடத்திற்கு வந்து பழைய பல்லவி பாட ஆரம்பித்தனர்.

(5)

பஸ் வந்தபாடில்லை. பஸ் நிலையத்தில் ஒரு மணி நேரம் பஸ்ஸிற்குக் காவல நின்று கொண்டிருப்பது ஒரு சிரமம. அது போதாதென்று பிச்சைக்காரர்தொல்லை. ஒரு மணி நேரம் நின்ருல் ஒரு ரூபா சில்லறை வேண்டும்.

பிச்சை எடுப்போரிலும் பலவிதம். உழைக்க முடியாதவர்கள் ஒரு ரகம். மற்றவர்கள் ஏமாற்றுக்காரர்கள். ஒரு வயோதிபக் கிழவி. அவளைத் தாங்கியவாறு ஒரு கிழவன். அவளின கணவனுக இருக்கலாம். பிச்சை என்ருே, ஐயா என்ருே அழைப்பதறகுக் கூட சகதியற்ற நிலையில அவள தகரக் குவளையை அசைக்க அதற்குள்ளிருக்கும சில்லறைகள் குலுங்கி அவளுக்காகக் குரல் எழுப்பின.

'டொக்கு, டொக்கு' எனச் சில்லறைகள் விழ கிழவி நகர்ந்து கொண்டிருந்தாள. கிழவன் முகத்தில் மகிழ்ச்சிப் பூரிப்பு. ஒருவர் போட்டால் தானே அந்தக் கியூவில் நிற்பவர்கள் சில்லறை தேட ஆரம்பிக்கின்றனர். இல்லையெனில் ஒத்தபடி எலலோரும் போடாமலே விட்டு விடுகின்றனர். பிச்சை கொடுப்பதிலும் சில வேளை ஒருமைப்பாடு இருப்பதில்லை. ஆனால் போடாமல் விடுவதில்தான் எவ்வளவு ஒற்றுமைப்பாடு நம்மவரிடத்தில்!

இரண்டு நாள் கழித்து மீண்டும பஸ் நிலையத்தில் அந்தக் கிழவி பிச்சைக்காக வந்து நின்ருள். இன்று அவளுடன் கிழவன் வரவில்லை. சுமார் முபபது வயது மதிக்கத் தக்க ஒரு பெண. நவநாகரீகமாக அந்தப் பிச்சைக் கோலத்திலும் அவள்
[illegible]
[illegible]
டைய கவுனே நிரூபித்தது.

அதே வேளையில் அவள் மீது எனக்குப் பரிவும் உண்டானது. அவளா அந்த உடையைத் தைத்துப் போட்டுக் கொண்டாள். எங்கே யாரிடமோ இரந்திருப்பாள். பணக்கார வீட்டில் பயன் படாது எனத் தூக்கி வீசியிருப்பார்கள். அதிலுள்ள கிழிசல்களை எப்படியோ தைத்து மானத்தைமறைக்க முயன்றது அவள் குற்றமா?

(6)

இரண்டாயிரம் ரூபா செலவு செய்து இருபதுபேர் விருந்து சாப்பிடுவதும் நமது நாட்டில் தான். இரண்டு சதத்துக்கு நாள் முழுவதும் சுற்றியலைபவர்களும் நமது நாட்டில் தான். ஆண்டவன் படைப்பில் தான் எத்தனை வேறுபாடு! மடுவும் மலையும் அருகருகே—மனித இனத்தில் மட்டும்விதி விலக்கா, என்ன?......

(7)

காலை முதல் வானம் இருண்டு கிடந்தது. அன்று போயா விடுமுறை நாள். கிழமையில் ஆறு நாட்கள் வேலை செய்து விட்டு ஒரு நாள் ஆறுதலாக இருக்க என்னவோ சோம்பலாகவிருந்தது. உடனே மட்னிக் காட்சிக்குப் போகலாம் என்று புறப்பட்டேன். பகல் இரண்டரை மணிக் காட்சி முடியும் பொழுது மழை லேசாகத் தூற ஆரம்பித்திருந்தது.

விரைந்து நடந்து பஸ் நிலையத்தை அடைந்துவிட வேண்டும் என்று ஓடினேன். மழை இருள்; நேரத்துடனேயே இருட்டி விட்டது போன்றிருந்தது. சன சந்தடியற்ற அமைதியான சூழலை இப்படியான வேளையில் தானே பட்டணத்தில் காண முடிகின்றது!

பிசு பிசுத்த மழைத்தூறல் பலமாகத் தொடங்கவே சிலர் பஸ் நிலையத்தை நோக்கி வேகமாக ஓட ஆரம்பித்தனர். என்னுல ஓட முடியாது. ஒருவிதமாக ஓடிச் சென்று ஒரு கடை வாசலில் ஒதுங்கி நின்று கொண்டேன.

போயாதினமாகையால் கடைகள் பூட்டப்பட்டிருந்தன. நகரங்களின் கடைகள பூடடப்பட்டதும் கடையின் முன் முகப்பில் பிச்சைக்காராகள், பைத்தியங்கள் குடித்தனம் ஆரம்பித்து விடுவதை எங்கும காணலாம். பகல் எலலாம வீதிகளிலும், மர நிழல்களிலும் நடமாடும் அவர்கள் இரவானதும கடைகளின் முன் குஷியாகப படுத்து இராப் பொழுதைக் கழித்து விடுகின்றனர். அன்று போயாதினமானுலும மழை நாள். பிச்சைககாரர்களுக்கும, பைத்தியங்களுக்கும விடுமுறை போலும். நான நினறிருந்த கடையை அடுத்திருந்த கடைகளிலெல்லாம குடும்பம் குடும்பமாய் வீற்றிருநதனர். அங்கே பஸ் நிலையத்தில் சந்திக்கும் பிச்சைக்காரக் கிழவி, அந்தப் பெண், கிழவன் எல்லோரும் இருந்தனர்.

தெருவிளக்கு அவர்கள் குடும்பத்துக்கு இலவச மின்சார ஒளி வினியோகம் செய்தது. மழையைக் கிழித்துக் கொண்டு யாரோ ஓடி வருவது தெரிந்தது. என்னைப போல யாரோ மழைக்கு ஒதுங்க வரக்கும் என எண்ணி ஒதுங்கி நின்று கொண்டேன. ஆனால்நான எதிர் பார்க்காத ஒருவர் அதாவது திருவாளர் புடிச்சுக்கிட்டான மழையில் நனைந்த கோலத்துடன் வந்து என் அருகே நின்ருன்.

மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வு என் இதயத்தில் ஒரே குழப்பம். தெருவில் நான் கண்ட காட்சிகள், 'அவன் இப்ப ஒரு மாதிரி' எனக் கடைக்காரார் சொன்ன விடயங்கள், எனக்கு என்னவோ போலிருந்தது.

(8)

வானமே பிய்த்துக்கொண்டதுபோன்ற பேய்மழை. உலகமே இடிந்துவிட்டாற் போன்ற இடியோசை—மின் வெட்டு பளிச், பளிச் என்று ஒரேயடியாய் இயற்கையின் கோரத்தாண்டவம்; வரவர வலுத்துக் கொண்டிருந்தது. அதைவிட என்னுள்ளம் ஒரு விஞடியில் அதிர்ந்து போயிருந்தது!

ஆனல் அவன் ஒன்றும் பேசவில்லை. அடுத்த கடை வாசலில் இருந்த கிழவியோடுவரும் பெண் ''துரை, துரை'' என்று கூறுவது கேட்டுத் திரும்பினேன். என் பக்கமாக அவள் சுட்டிக்காட்ட கிழவன் எழுந்து பார்த்துச் சிரித்தான். இருண்ட வானத்தில் மின்னல் வெட்டுறைற்போல அந்தப் பெண்ணின் முகத்தில் ஓர் மலர்ச்சி!

மழைக்கு ஒதுங்க வந்த இடத்திலுமா பிச்சைத் தொல்லை. கடவுளே என் இளகிய மனதுக்குத்தான் இப்படிச் சோதனையா என பாக்கெட்டில் கையை வைத்துக்கொண்டேன். அதே வேளையில் அந்தப் பெண், பிச்சைக்காரியாக இருந்தாலும் பிச்சை போடும் என்னை—ஞாபகமாக — நன்றியறிவுடன் நினைவு வைத்திருந்தபடியால்தானே அப்படிக் கூறினுள் என்ற நினைப்பு மனதில் ஓர் திருப்தியை ஏற்படுத்தியது.

''துரை, துரை சோறிருக்கி துன்னுறியா?'' கிழவனின் குரல். தலையை ஆட்டிக்கொண்டே திருவாளர் புடிச்சுக்கிட்டான் அவர்கள் பக்கமாகச் சென்ருன்.

(9)

என் நினைவிலே ஒரு பேரிடி விழுந்து தாக்கியது போன்ற உணர்வு மேலிட அவர்களைத் திரும்பிப் பார்த்தேன். ஒரு பழைய குவளையிலுள்ள சோற்றைப் பிசைந்து அப்பெண் வைக்க புடிச்சுக்கிட்டான் உண்டு மகிழ்ந்து கொண்டிருந்தான்.

வீட்டுக்குப் போவதைக் கூட மறந்து அவர்களுடைய விநோதச் செயல்களைப் பார்த்துககொண்டு நின்றேன்.

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டதும் இரசித்ததும்

"அசரீரி"

இலங்கை வானொலி என்று வழங்கப்பட்டு வந்த எமது நாட்டு ஒலிபரப்பு, இப்பொழுது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என மாற்றப்பட்டுப் பல மாதங்களாகி விட்டன.

ஒலிபரப்புச் செய்திகளை முன் கூட்டியே அறிந்து கொள்வதற்கு நிகழ்ச்சி நிரல் அடங்கிய ஒரு வெளியீடு 'வானொலி வெளியீடு என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருக்கிறது. அது அன்றும் வானொலி வெளியீடு தான். இன்றும் அதே பெயருடன் தான் இருக்கிறது!

வானொலியை ஒலிபரப்பு என மாற்றி விடத் துடித்தவர்கள் இந்த வெளியீட்டை மட்டும் ஏன் இன்னமும் 'வானொலிவெளியீடு' என்று வைத்துக் கொள்ள வேண்டும்? 'தெக்கம எக்காய்' —அதாவது வந்து இரண்டும் ஒன்று என்பது அர்த்தமா? சிங்கள ஒலிபரப்பில் மட்டும் வானொலி என்பதற்கு அன்றும் இன்றும் ஒரே பெயர் தான் வழங்கப் பட்டு வருகிறது என்பதை இரசிகர்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

மூன்று மொழிகளிலும் நிகழ்ச்சிகளை உள்ளடக்கி வெளிவரும் இந்த 'வெளியீடு' முன் அட்டையில் நவம்பர் 20—டிசம்பர் 4 1968 என்ற வகையில் ஆங்கிலத தமிழ் இருப்பதை நாம் கவனிக்கலாம். உள்ளுக்கு நுழைந்தால், வர்த்தக ஒலிபரப்புச் சேவையில் 'போயா தின முதல் நாள் என்றிருக்கும். அடுத்தது போயா தினம்...அடுத்து போயா 1 வது நாள்...போயா 2வது நாள்..தினம் என்றால் என்ன? நாள் என்றால் என்ன? இ. ஒ. கூ. தாபனத்துக்குத்தான் வெளிச்சம்!

நெஞ்சிலே கையை வைத்து உண்மையை நோக்கினால், போயா நாள் விடுதலை நாளான பிறகு இன்று என்ன கிழமை என்பது பலருக்குப் புரியாத ஒரு புதிராகி விட்டது. இந்த நிலையில் வானொலி வெளியீட்டில் சிங்களத தமிழும் ஆங்கிலத் தமிழும் கலந்து, தமிழைச் சாமபாருக்கி வைத்திருக்கும் இட்லித் தமிழனை இலங்கைத தமிழர்கள மன்னிக்க மாட்டார்கள்...

நாடகப் பகுதியில் இது வரை பல நடிகர்கள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பது பலருக்குத் தெரிந்த இரகசியம். சில பழம் பெரும் நடிகர்களுக்கு நடிக்கச் சந்தர்ப்பங்கள மறுக்கப் படும் வேளையில் சில கற்றுக் குட்டிகளுக்கு நிறைய சந்தர்ப்பம கிடைத்து வருவது எதனால்? பல நடிகர்கள் நாடகப் பகுதிக்கு முழுக்குப் போட்டு விட்டு வேறு பகுதிகளில் தஞ்சம் புகுந்திருப்பது எதனால்! பொதுவாக, 'காக்கா' பிடிப்பவர்களுக்கு மட்டுமே ஒ. ப. கூ. தாபனத்தில் இடமுண்டா?

பாலும் தெளிதேனும் பாகும பருப்பும் இவை நாலும் கலந்து பிள்ளையாருக்குக் கொடுத்து விட்டுத் தானே சங்கத் தமிழ் மூன்றும் தாவென்று ஒளவை யார் கேட்டார். அதே போல் நாங்கள் செய்தாலென்ன குற்றம் என்று நினைக்கிறார்களாம் ஒ. ப. கூ. தாபனத்துப் பொறுப்பாளர்கள். இந்த நாட்டு மக்களின் பொதுச் சொத்தான ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தைத் தனிப்பட்டவர்களின் எதேச்சாதிகாரமாக, அயோக்கியத்தனத்தின் உறைவிடமாக வைத்திருக்கத் தமிழ் மக்கள் ஒரு போதும் அனுமதிக்க முடியாது! தமிழ் ஒலிபரப்பு தமிழர்களின் சொத்து!

நாட்டுக்குத் தேவையான நல்ல கருத்துக்களை ஒலிபரப்ப வேண்டியது ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கடமை! எமது ஒலிபரப்பில் அத்தகைய நிகழ்ச்சிகளை நாம் எப்பொழுதாவது கேட்டிருக்கிறோமா என்பதை நினைத்துக் கூடப் பார்க்க முடியாத நிலையில் இருக்கிறோம்!

யாழ்ப்பாணத்துத் தமிழ் செந்தமிழ் என ஆறுமுக நாவலரால் நிலை நாட்டப் பட்டது. அது அப்படியிருக்க, நையாண்டித் தமிழ் தான் யாழ்ப்பாணத்தான் பேசுவது என்ற நிலைக்கு இன்றைய ஒ. ப. கூ. தாபன நிகழ்ச்சிகள் கொண்டு வந்திருக்கின்றன.

பேச்சுத் தமிழ் நாடகத் தமிழாகுமா? யாழ்ப்பாணத்தில் எங்கோ ஒரு மூலையில் பேசப்படும் தமிழ் எல்லோருக்கும் ஏற்ற பேச்சுத் தமிழாக இருக்க முடியாது!

யாழ்ப்பாணத்தை எடுத்துக் கொண்டாலே பட்டினத்தில் பேசும் தமிழ்வேறு. பருத்தித்துறையில் பேசும் தமிழ் வேறு சுருங்கச்சொன்னால் ஊருக்கு ஊர் பேசப்படும் தமிழின் வகையே வேறு! மட்டக்களப்புத்தமிழ் எல்லாவற்றிற்குமே வேறு பட்டது! ஆகவே யாழ்ப்பாணத்துப் பேச்சுத் தமிழ் இ. ஒ. ப. கூ. தாபனத்தில் கையாளப்பட்டால் மட்டக்களப்புப் பேச்சுத் தமிழுக்கும் தகுந்த இடமளிக்கப் பட வேண்டும். அதேபோல் மலை நாட்டுத் தமிழுக்கும் இடந்தரப்பட வேண்டும். இல்லையென்றால் எல்லோருக்கும் பொதுவான செந்தமிழாக எல்லாம் இருப்பது நல்லது.

வேலை நிறுத்த நேரத்தில் சில பொறி இயக்குனர்களுடன் (என்ஜினியர்களுடன்) நடாத்தப்பட்ட பேட்டிகள் 3-12-68ல் ஒலிபரப்பாகின. அவை தமிழைப் பழிப்பனவாக இருந்தன.

அவங்கள் வந்தான்கள்... சிக்ஸ்ரி பேசனற்வேலை செய்யுறுங்கள்' என்பன போன்றவை என்ன தமிழோ? என்ன பேட்டியோ?

4-12-68ல் ஜி. நல்லம்மா எழுதிய 'பதியும் பதவியும்' என்ற நாடகம் ஒலிபரப்பானது. இந்த நாடகத்தில் என்ன புதுமை இருந்ததெனச் சுழியோடித் தேடினாலும் யாராலும் கண்டு பிடிக்க முடியாது! எழுதிப் பழகுபவர்களுக்கு இடமளிக்கப் படுகிறதா? ஐயோ தமிழ் நாடகமே! இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தாரால் நீ கொலை செய்யப்படவேண்டுமென்பது உன் விதியா?

# அவனுக்குப் புரிந்தது

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சாப்பாடு முடிந்ததும் ஒரு பழைய துண்டினால் துரையின் தலையை துடைத்து விட்டாள் அப்பெண். அவர்களுக்கு அவன் துரையா? அல்லது அவன் பெயரே துரையா?

கிழவனும், கிழவியும் தங்கள் பாட்டில் சிரித்துச் சிரித்து ஏதோ கதைத்துக் கொண்டு படுத்திருந்தனர். அவர்களுக்கருகே புடிச்சுக் கிட்டான் அப்பெண்ணை இறுகப் பிடித்துக்கொண்டிருந்தான். அந்த வேளையில் அவனைப் பைத்தியமாக நினைக்க என்னால் முடியவில்லை.

(10)

ஊருக்கும் உலகத்துக்கும் பைத்தியமாக — புடிச்சுக்கிட்டானை — காட்சியளிக்கும் அவனா பைத்தியம்? பொது நோக்கில் பார்க்காமல் ஆழ்ந்து நோக்கினால் நாம் எல்லோரும் பைத்தியங்கள் தானே!

மாடியிலும் — குச்சுவீட்டிலும் வாழ்பவர்கள்கூட வசதிக்கு ஏற்ற மாதிரி வாழ்ந்து கொண்டிருந்தாலும் இயற்கை நெறியில் எல்லோரும் ஒரே மாதிரிப் பைத்தியங்களாகத் தானே நடந்து கொள்கின்றனர்!

இரவின் அமைதியினூடே தூங்கிக் கிடக்கும் சமுதாயத்தில் பலர் விழித்துக் கொள்வதும், அந்த விழிப்பினூடே ஒரு விழிப்புணர்ச்சி அடைவதும், பின்னர் பைத்தியங்களாக நடந்துகொள்வதும் உலகத்தின் கண்களுக்குப் பைத்தியமற்ற மனிதர்களாக விளங்குபவர்களிடையே நிகழ்வதாகும். அப்படியொரு நிகழ்ச்சி இந்தப் பிச்சைக்காரிக்கும்—பைத்தியத்துக்குமிடையே நிகழ்வது......?

எல்லோருக்கும் பயங்கரமானவனும் — பைத்தியமானவனுமாக விளங்கும் அவன் அவளுக்கு இனியவனாக — இன்பவிருந்து அளிப்பவனாக விளங்கினான். என் நினைவு நிகழ்ச்சியினூடே அவர்களின் செயல்களையும் கவனித்தேன். அவளும் — அவனும் கணவன் மனைவியாக நடந்துகொண்டனர். அதற்கு மேலும் அங்கு நிற்க என் மனச்சாட்சி விரும்பவில்லை. மழையையும் பொருட்படுத்தாது கீழே இறங்கினேன்.

அதே வேளையில் அந்தப் பெண் ஏதோ மெல்லக் கூறுவதும், அதைத் தொடர்ந்து ''புடிச்சுக்கிட்டன், புடிச்சுக் கிட்டன்'' என்று அவன் கத்துவதும் தெளிவாகக் கேட்டன.

கடியாத நாய்கள் சிலகால போகத்தில் உறுமிக் கடிக்க முனைவதும், சாதுவான காளைகள் சிலவேளைகளில் மூசிக்கொண்டு முட்டவருவதும் மிருக வர்க்கத்தில் சில காலங்களில் நாம் காண்கின்றோம். பெரியவர்கள் அதற்குக் காரணமும் கூறுவார்கள்......அப்படித் தான் பேசும் பாஷை புரியாது—பைத்தியமாய், எவருடனும் சோலி செய்யாமல் திரிந்தவன், செயல்கள் மாறுபட்டு கருத்துள்ள — விளங்கமுடியாத செயல்களில் ஈடுபட்ட காரணம் எனக்குப் புரிந்த......!

புதுமைகள் பல நாளுக்கு நாள் மலிந்து வளர்ந்து வரும் நாகரீகப் புதுவுலகில் —காதல் போலியில் மயங்கி பொய்மையின்பம் அனுபவிக்கும் இளம் ஜோடிகள் பலவற்றைப் பஸ் நிலையத்திலும், வேறும்பல இடங்களிலும் கண்டிருக்கின்றேன். ஆனால் யாழ் நகர் போன்ற பெரிய பட்டினத்தில் எல்லாம் இலவசமாகப் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கும் அந்தப் பிச்சைக் காரியும், பைத்தியமும் ஓர் தனி உலகில் எல்லோரையும்போல் சிருஷ்டி கர்த்தாக்களாகி வாழ்ந்து கொண்டிருந்ததைக் காணக் கண்கோடி வேண்டும்.

பைத்தியமான அந்த நிலையிலும் அவன் வாழ்ந்த உலகில் ஏதோ அவனுக்குப் புரிந்திருந்தது! இல்லையெனில் அவன்......?

(யாவும் கற்பனை)

# கிளிநொச்சிப்பட்டின....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பின்னும் காங்கிரசில் சேராதவர்கள் - உலகத்தையே ஏமாற்ற முயல்கிறார்கள். பட்டினசபைச் சட்டப்படி பட்டினசபைத் தலைவரைப் பதவியிலிருந்து நீக்குதற்கு 5 பேர் அவருக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். எனவே 4 சுயேச்சைகள் பட்டின சபைத் தலைவரை அசைக்க முடியாது.

உண்மை இப்படியிருக்க நாங்கள் நாலுபேர் தமிழரசார் மூன்றுபேர் என்று கூக்குரல் போடுவதாலும், பட்டினசபைக் கூட்டங்களில் பொருத்தமற்ற நாகரிகமற்ற தீர்மானங்களைக் கொண்டு வந்து கூட்டங்களைக் குழப்பமுயல்வதாலும், பிழையான செய்திகளைப் பத்திரிகைகளில் வெளியிடுவதாலும் இவர்கள் எதையும் சாதிக்கமுடியாது. இவர்கள் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்வேற்றாமல் தடுக்கலாம். இப்படித் தடுத்தால் நெல்லியடிப் பட்டினசபையைப் போல் இப்பட்டினசபையின் நிருவாகத்தை உள்ளூராட்சி ஆணையாளர் எடுதது நடத்தும் நிலை ஏற்படும்.

இந்தக் கசப்பான உண்மையை அறிந்துகொண்டும் ''புது மந்திரியைப் பிடித்துத் தலைவரைப் பதவி நீக்கம் செய்வோம்'' என்றும் பட்டினசபைத் தேர்தலில் தமிழரசுக்கட்சி தோற்றதால் கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் இராஜிநாமாச் செய்யவேண்டும் என்றும் பைத்தியம் முற்றிப் பிதற்றுவதால் என்ன பயன்? நெல்லியடிப் பட்டின சபையைத் திரு. சிவசிதம்பரத்தின் ஆதரவாளர் ஆட்சிபுரிய முடியவில்லை. இப்பொழுது ஆணையாளர் நடத்துகினறார். இதற்காக உடுப்பிட்டிப் பாராளுமன்ற உறுப்பினர் இராஜிநாமாச் செய்யவேண்டுமென்று எதிர்க்கட்சியினர் கூப்பாடு போடுகிறார்களா?

## ஜீ. ஜீ. விலகுவாரா?

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் தமிழ் காங்கிரசு திரு. ஆனந்தசங்கரியின் சந்தர்ப்பக் கொள்கைக்கு—அவர் கிளிநொச்சியில் அவிட்டு விட்ட புரட்டுக் கொள்கைக்கு—யாருகப் போட்டியிட்டது. மாநகரசபை ஆட்சியைத் தமிழ் காங்கிரசுக்காரர் பிடிக்க முடியவில்லை. எனவே திரு. ஜி.ஜி. இராஜிநாமாச்செய்வாரா? மக்கோனேவுக்குப் போய் வந்தவர்களும், தொழிலாளர்களின் தோழர்களாயிருந்து முதலாளிகளின் கைப்பொம்மைகளாகிய குத்துக்கரண எத்தர்களும் இதற்கு என்ன சொல்வார்கள்?

கரைச்சிக் கிராமச்சபையும் தமிழரசுக் கட்சிக்கு எதிரான சுயேச்சைகளின் ஆட்சியிலிருந்து நழுவி தமிழரசுக் கட்சிப் பக்கம் சார்கின்றது. இங்கும் கிராமச்சபை தலைவர் நிலைமை அந்தரத்தில் உள்ளது. கிளிநொச்சிப் பட்டினசபையைப் போல இக்கிராமச்சபையும் விரைவில் ஆணையாளரின் ஆட்சிக்குட்படலாம்! சுயேச்சைகளால் - பணத்துக்கு அடிமைப்படுபவர்களால் - தான் [illegible] குழப்பங்களும் உண்டாகின்றன: இந்த இரு சபையிலும் காங்கிரசு ஒளிச்சு விளையாடப்பார்க்கின்றது. வெளியே வந்து நிமிர்ந்து நிற்க அதற்குத் தெம்பும் திராணியுமில்லை. பொய்ப் பிரசாரத்தினாலும், ஏமாற்றச் செயல்களாலும், பத்திரிகைகளில் கரடி விடுவதாலும் எவ்வளவு காலம்பிழைக்கலாம்?

ஆர். நடராசா
கிளிநொச்சி.

# கதைக்கும்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவிடுதல், குகன் இராமனைச் சந்தித்தல், சீதை கவரப்படுமுன் இராவணனோடு வாதாடல், அசோக வனத்திலே இராவணனுக்கும் சீதைக்கும் நடக்கும் வாதம் முதலிய செய்திகளை கற்பனை செய்து புதிய முறையிற் கதையாக எழுதலாம். இலங்கைச் சரித்திரம் சம்பந்தமான நிகழ்ச்சிகளை ஆசிரியர் தெரிந்தெடுத்து மாணுக்கரைக் கொண்டு எழுதுவிக்கலாம். (பக் 23)

கதை எழுதுதலைப்பற்றித் தான் ஆசிரியர் 'கதைஅளக்கிறரே' ஒழியச் சிறுகதை எழுதலைப்பற்றிஅவர்விளக்கவில்லை என்பதை இந்தப் பந்தி நன்கு காட்டுகின்றது. தலைப்பு 'சிறுகதை எழுதல்; ஆனால் சிறுகதை என்ற சொற்றொடர் 16 பக்கங்களில் (பக் 16-பக் 31) ஓரிடத்தில் மட்டுமே பொருத்தமின்றிப் புகுத்தப்பட்டுளது. 16 பக்கங்களும் கதை எழுதல் பற்றித்தான் கூறுகின்றன. தலைப்பு வேறு; விளக்கம் வேறு. இந்தக் கேலிக் கூத்தை வேறு எங்கும் காண முடியாது.

இப்பகுதியிலுள்ள தெளிவற்ற வாக்கியங்களையும் பொருத்தமில்லாக் கூற்றுக்களையும், வாக்கியப் பிழைகளையும், எழுத்துப்பிழைகளையும் எடுத்துக் காட்டி நேரத்தை வீணுக்க நான் விரும்பவில்லை.

# தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்கு 500 ரூபா வெளி நாட்டு செலவாணியும்அதே இடத்திற்கு செல்லும் இந்து யாத்திரீகர்கட்கு 300ரூபா செலாவணியும் ஒதுக்கப்படுகிறது. ஒரே நாட்டின் புனிதஸ்தலங்களுக்கு செல்லும் யாத்திரீகர்களிடையே அரசாங்கம் ஏன் பாரபட்சம் காட்டுகிறதென்று எனக்கு விளங்கவில்லை. இப்பாரபட்ச நடவடிக்கைக்கு உடனடியாக அரசாங்கம் முற்றுப் புள்ளியிடவேண்டும்''

—இவ்வாறு திரு. இருச்செல்வம் கூறினர்.

# பலப்பிட்டியாவில்..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பலப்பிட்டியா இடைத் தேர்தல் முடிவு, அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிகளுக்கும் சிங்கள மக்களிடையே இருக்கும் செல்வாக்கை அளப்பதற்கான ஓர் அரசியல் அளவுகோலாக விளங்கப்போகிறதென்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத் தமிழ் பேரவையின் தமிழ்நாட்டுக் கிளைக்கு போட்டியாக

# உலகத் தமிழ்க் கழகம் பாவாணர் தலைமையில் திருச்சியில் உருவாகியது!

தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி மன்றத்துக்குப் போட்டியாக மறைமலை அடிகளை மூலவராகக்கொண்டு புதியதொரு உலகத் தமிழ்க் கழகம் அண்மையில் திருச்சியில் உருவாக்கப்பட்டுள்ளது. புதிதாக நிறுவப்பட்டுள்ள உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவராக மொழிப்பேரறிஞரும, திராவிட மொழியியல் ஆராய்ச்சி அறிஞருமான திரு. ஞா. தேவநேயப் பாவாணர் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

இம்மாநாடு நிறைவேற்றிய தீர்மானமொன்றில் "தமிழைக் காட்டிக்கொடுக்கும் வையாபுரிக் கூட்டத்தைச் சேர்ந்த ஆய்வர் தனிநாயகம் தோற்றுவித்த உலகத் தமிழ்ப் பேரவையை தமிழ்நாடு ஒப்புக்கொள்ளாததனால், ஈழம், சிங்கை, மலேயா முதலிய வெளிநாட்டு தமிழ் மன்றங்கள், மறைமலையடிகள் வழிப்பட்ட இவ்வுலகத் தமிழ்க் கழகத்தோடு உடனே இணையுமாறு இம்மாநாடு அவாவுகின்றது" என்று கூறப்பட்டுள்ளது.

1970ம் ஆண்டுப் பாரிசு உலகத் தமிழ் மாநாட்டிற்கு இவ்வுண்மைத் தமிழ்க் கழகத்தினின்றே விடை முகவரை வரவழைக்குமாறு அம்மாநாட்டுத் தலைவரைக் கேட்டுக் கொள்ளும் மற்றோர் தீர்மானமும் அங்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

## வையாபுரிக் கூட்டத்தாரென தனிநாயகம் மீது தாக்கு!

உலகத் தமிழ்க் கழகம் அமைப்பதற்கான மாநாடு அண்மையில் திருச்சி தேவர் மன்றத்தில் அறிஞர் ஞா. தேவநேயப்பாவாணர் தலைமையில் நடைபெற்றது. "உலகம் முழுவதும் தழுவியதும், கட்சி சார்பற்றதும் இனிமேல் தமிழைக் காக்கும் முழுப்பொறுப்பும் தாங்குவதுமே" உலகத் தமிழ்க் கழகத்தின் பிரதான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பேராசிரியர்களும் அறிஞர் பெருமக்களும், பத்திரிகையாசிரியர்களும், புலவர்களும் பெருந்திரளாகக் கலந்துகொண்டனர்.

மாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. தேவநேயப்பாவாணர் தமது உரையில், சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு உண்மையான தமிழ்ப்பற்றுள்ளவர்கள் அழைக்கப்படவில்லையெனவும், இதனால் தமிழர்களின் நோக்கம் நிறைவேறவில்லையெனவும் கூறினார்.

மதுரைப் பேராசிரியர் திரு. எம். அழகனார், பேராசிரியர் மறை. திருநாவுக்கரசு, புலவர் பொன்னம்பலனார், பேராசிரியர் இலக்குவனார் மகனான திரு. மறைமலையுட்பட தமிழறிஞர்கள் சொற்பொழிவாற்றிய பின்னர், கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தீர்மானங்கள்

(1) மேலைநாட்டு நிலவியல், மாந்தவியல், மொழியியல்பேராசிரியர்களின்முற்றமுடிந்த ஆய்வுரைகளின்படியும், இக்கால் உள்ள பழந்தமிழ் நூல்களிற் குறிக்கப்பெற்ற செய்திகள், உரைக்குறிப்புகள் இவற்றின்படியும், புறச்சான்றுகளான— அகழ்ந்தெடுக்கப்பெற்ற பழம் பொருள்கள், மண்டையோடுகள், கருவிகள் முதலியவற்றைக் கொண்டும், பண்டைத் தமிழனின் பிறந்தகம், நிலநூல் வல்லாரால் காண்டுவானா (Gondwana) எனவும், உயிர்நூல் வல்லாரால் இலெமூரியா (Lemuria) என்றும் குறிக்கப்பெறும் குமரிநாடே என்று இம்மாநாடு அறுதியும் இறுதியும் உறுதியுமாகத் தீர்மானிக்கின்றது.

(2) இக்கால் நமக்குக் கிடைத்துள்ள அகப்புறக் கரணியங்களைக் கொண்டும், அறிவியலைக் கொண்டும், பகுத்தறிவைக்கொண்டும், தமிழ் நெடுங்கணக்கின் தோற்றம் கி. மு. 20,000க்கும் முன்பு இருத்தல்வேண்டும் என இம்மாநாடு உறுதியாகத் தீர்மானிக்கின்றது.

(3) அவ்வாறே தொல்காப்பியரின் காலம் கி. மு. ஏழாம் நூற்றாண்டு என்றும், திருவள்ளுவர் காலம் கி. மு. இரண்டாம் நூற்றாண்டு எனவும் இம்மாநாடு உறுதியாகத் தீர்மானிக்கிறது.

### பொதுமக்களை நோக்கியவை:

(1) தமிழர் யாவரும் தமிழ்ப் பெயரே தாங்கல் வேண்டும்.

(2) இருவகைச்சடங்குகளையும், கோயில் வழிபாட்டையும் தமிழர் தமிழிலேயே நிகழ்த்துதல் வேண்டும்.

(3) ஊர்ப்பெயர், தெருப் பெயர், கட்டிடப் பெயர், பூங்காப் பெயர் முதலிய இடப்பெயர்களையெல்லாம் தமிழ்ச் சொற்களாகவே அமைத்தல் வேண்டும். அயற் சொற்களா யிருப்பவற்றை உடனே தமிழ்ச் சொற்களாக மாற்றுதல் வேண்டும்,

### புலவர்களை நோக்கியவை:

தமிழ்ப் புலவரும் தமிழாசிரியரும் தமிழிற் பேசும் போதெல்லாம் தனித் தமிழிலேயே பேசுதலும் எழுதுதலும் வேண்டும்.

தமிழாசிரியர் மாணவர்க்குத் தமிழ்ப்பற்றையூட்டி என்றும் தூய தமிழிலேயே பேசப் பழக்குதல்வேண்டும்.

### தாய்மாரை நோக்கியது:

தொட்டிலாட்டும் கையே நாட்டையாளும் கையாயிருப்பதால் தமிழ்நாட்டுத் தாய்மாரெல்லாரும் தங்கள் மக்களைத் தமிழுணர்ச்சியூட்டி வளர்க்குமாறும், தவருகச் செல்லும் தங்கள் கணவன்மாரைத் தமிழ்நெறிக்குத் திருப்புமாறும் இம்மாநாடு அவரை வேண்டிக் கொள்கின்றது.

### மாணவரை நோக்கியவை:

உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் எவ்வகை அரசியல் கட்சியிலும் ஈடுபடாமல் முழுக்கவனத்தையும் கல்வியிலேயே செலுத்துதல் வேண்டுமென்றும், தமிழைத் தூய்மையாகவே எழுதியும், பேசியும் வருதல் வேண்டுமென்றும், தமிழுக்கு எவ்வகையிலேனும் கேடு நேரின் அதை இயன்றவகையெல்லாம் நின்று தடுக்க வேண்டுமென்றும் இம்மாநாடு அவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

### கழகங்களையும் படிப்பகங்களையும் நோக்கியவை:

தனித்தமிழாற்றல் அல்லது பற்றுள்ளவரையே சொற்பொழிவாளராகவும் விழாத் தலைவராகவும் அமர்த்துதல் வேண்டும்.

'கருநாடக சங்கீதம்' என்பதைத் "தமிழிசை" அல்லது 'தென்னிசை'யென்றும், பரதநாட்டியம் என்பதைத் தமிழ் நடனம் என்றுமே குறித்தல் வேண்டும்.

### வெளிநாட்டுத் தமிழரை நோக்கியது:

தமிழைக்காட்டிக்கொடுக்கும் வையாபுரி கூட்டத்தைச் சேர்ந்த ஆய்வர் தனிநாயகம் தோற்றுவித்த உலகத் தமிழ்ப் பேரவையைத் தமிழ்நாடு ஒப்புக்கொள்ளாததினால், ஈழம், சிங்கை, மலேயா வெளிநாட்டுத் தமிழ் மன்றங்கள் மறைமலையடிகள் வழிப்பட்ட இவ்வுலகத் தமிழ்க் கழகத்தோடு உடனே இணையுமாறு இம்மாநாடு அவாவுகின்றது.

### பாரிசு உலகத்தமிழ் மாநாட்டுத் தலைவரை நோக்கியது

வருகின்ற 1970-ஆம் ஆண்டுப் பாரிசு உலகத்தமிழ் மாநாட்டிற்கு இவ்வுண்மைத் தமிழ்க் கழகத்தினின்றே விடை முகவரை வரவழைக்குமாறு, அம்மாநாட்டுத் தலைவரை இம்மாநாடு வேண்டிக்கொள்கின்றது.

---

## சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை மேலைக் கரம்பொன் ஆனந்த ஜனசமூக நிலையக் கொழும்புக் கிளையின் வருடாந்தக் கூட்டம் திரு. வை. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் தெமட்டக்கொடையில் உள்ள அதன் அலுவலகத்தில் நடைபெற்றது.

கீழ்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்; —

போஷகர்: திரு. ச. சிவசம்பு, தலைவர்: திரு. வை. பாலகிருஷ்ணன், செயலாளர்: திரு. ச. ஐ. தனபாலசிங்கம், பொருளாளர்: திரு. சி. நவரெத்தினம்.

---

## நெடுங்கேணி தமிழரசுக் கிளையின் பெரும் வெற்றி

நெடுங்கேணியிலுள்ள வற்ருத நீர் ஊற்றுக் கிணற்றை திருத்தியமைக்க ஏற்பாடு செய்யும்படியும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நெடுகேணிக் கிளையினர் கடந்த மூன்று வருடங்களாக கடும் முயற்சி எடுத்து வந்ததன் பலனாக இப்போது அக்கிணற்றை திருத்தியமைத்து புனருத்தாரணம் செய்ய உள்ளூராட்சி அமைச்சு ரூபா50, 000 ஒதுக்கியுள்ளது.





பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11
தொலைபேசி 3597—6522
தந்தி: தாமரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாஜி ஏற்கும் கதாபாத்திரம் உயிர்பெறும் இரகசியம் என்ன?

சில சமயங்களில் புதுமாதிரி குணசித்திர பாத்திரங்களை ஏற்று நடிக்க நான் ரொம்பப்பிரியப்பட்டதுண்டு. அப்படி நான் விரும்பி, நடித்துப் பெருமையும் பட்டிருக்கிறேன்! பாராட்டும் பெற்றிருக்கிறேன்!

பல படங்களில் பணத்திற்காக நடித்திருக்கிறேன்! சில படங்களில் நண்பர்களின் கட்டாயத்திற்காக நடித்திருக்கிறேன்! சில படங்களில் வரும் கதாபாத்திரங்கள் என் மனதிற்கு பிடித்து நடித்திருக்கிறேன்!

என் மனசுக்குப் பிடித்து நடித்தது மக்களுக்குத் திருப்தி அளித்ததில்லை!


நண்பர்களின் கட்டாயத்திற்காக நடித்தது மக்களிடையே அமோக வரவேற்பைப் பெற்றிருக்கிறது!

நண்பர்கள் கட்டாயப்படுத்துகிறார்களே என்று நான் நடிக்காமல் விட்டிருந்தால் நல்ல கதாபாத்திரம் ஏற்று நடிப்பதை ''மிஸ்'' பண்ணித் தவற விட்டு நல்ல பாத்திரத்தை இழந்திருப்பேனே என்று மனசு சோர்வு அடைந்தது உண்டு! அப்படிப்பட்ட பாத்திரங்களை நான் ஏற்று நடிக்கும்போது அதனால் ஆத்ம திருப்தி ஏற்படும் என்று நினைத்துக் கனவு கண்டிருக்கிறேன். அப்படிப்பட்ட பாத்திரங்களை ஏற்று நடித்தது வெறும் என்னுடைய திருப்திக்காகமட்டுமேநின்று போய் விட்டதும் உண்டு. அப்படி நேரும்போது நான் யோசிப்பது உண்டு!

எங்கே தவறு செய்து விட்டேன், அது எப்படி நேர்ந்தது என்று சிந்தித்து ஒரு முடிவுக்கும் வருவது உண்டு! கற்பனை சரியில்லையோ அல்லது அதிக கற்பனையோ என்று சிந்தித்தது உண்டு!

## கணேசனே சொல்கிறார்!

''கப்பலோட்டிய தமிழன்'' படம் வந்தபோது அதற்குக் கிடைத்த ''வரவேற்பை'' என்னால் மறக்க



முடியவில்லை ஆனால், அதே படம் இப்பொழுது திரையிடப்படும் தியேட்டர்களில் புதுப்படம் வெளியிடப்படுவது போல வரவேற்பைப் பெறுகின்றது!

அதனால்தான் அப்போது நான் எங்கே தவறு, ஏன் என்ன தவறு செய்தேன் என்று யோசிக்கிறேன்!

ஒரு வேளை காலத்தோடு சேர்ந்து செய்யவில்லையோ? அல்லது காலம்என்னை முந்திவிட்டதோ?

ஆனால், என் மனதைப் பொறுத்தவரை திருப்தி!

என்னிடம் நானே ஏமாந்த சில நிகழ்ச்சிகளும் உண்டு.

என்னை நேரில் சந்திக்கும் நண்பர்களும், பத்திரிகையாளர்களும் ''எந்தக் கதாபாத்திரம் உங்கள் மனதைக் கவர்ந்தது'' என்று கேட்கிறார்கள்.

அப்படிக் கேட்கும்போது என் கண்முன் பல கதாபாத்திரங்கள் வந்து நிற்கின்றன!

''என்ன சொல்கிறாய்? யார் சிறந்தவன்? நானா? அவனா?'' என்று கேள்விக் கணைகளை எழுப்புகின்றன. அப்போது, ''எனக்கு ஒன்றும் தெரியாது! மக்களிடம் கேட்க வேண்டும்'' என்று நான் சொல்லி விடுகிறேன்!

எதற்காக நான் அப்படிச் சொல்கிறேன் என்றால் நான் எடுத்துக் கொண்ட கதாபாத்திரம் சிக்கல் நிறைந்ததாக இருக்கும்! இல்லை......இல்லை......எனக்கு தரப்படும் கதாபாத்திரமே அப்படிப்பட்டதாகத் தான் இருக்கும்!

எந்தக் கதாபாத்திரத்தின் மீதும் சொந்த விருப்பு, வெறுப்புகளைக் காட்டியதில்லை! 'மேக்.அப்' போட்டு செட்டுக்குள் நுழைந்ததும் வேறு எண்ணங்களுக்கோ ஆசைகளுக்கோ இடம் கொடுப்பதில்லை!

அப்படி நடப்பதால்தான் அந்தக் கதாபாத்திரம் உயிர் பெற முடிகிறது!

## சிவாஜியைப் பற்றி சில ரசமான தகவல்கள்!

வீரபாண்டிய கட்டபொம்மன் படம் முதல் தில்லானா மோகனம்பாள் படம் வரை 11 கலர்ப் படங்களில் சிவாஜி கணேசன் நடித்திருக்கிறார்!

சிவாஜி நடித்து ஜனாதிபதியின் பாராட்டுப்பரிசுபெற்ற முதல் படம் அந்த நாள்! அதைத் தொடர்ந்து எதிர்பாராதது, மங்கையர் திலகம், ஸ்கூல் மாஸ்டர் (கன்னடம்) அன்னையின் ஆணை, தங்கப்பதுமை, வீரபாண்டிய கட்டபொம்மன், தெய்வப் பிறவி, பாவமன்னிப்பு, பாசமலர், பழநி, கர்ணன், திருவிளையாடல் ஆகிய படங்களுக்கு ஜனாதிபதியின் பாராட்டுப் பத்திரம் பரிசு கிடைத்தது.



பாகப் பிரிவினை, கப்பலோட்டிய தமிழன், கைகொடுத்த தெய்வம் ஆகிய படங்களுக்கு ஜனாதிபதியின் வெள்ளிப் பதக்கம் பரிசு கொடுக்கப்பட்டது.

1960ம் ஆண்டு கெய்ரோவில் நடந்த ஆசிய-ஆப்பிரிக்க பட விழாவில் சிறந்த படமாக கட்டபொம்மனையும் சிறந்தநடிகராக சிவாஜி கணேசனையும் தேர்ந்துஎடுத்தனர்.

சிவாஜி கணேசனுடன் அதிக படங்களில் இணைந்து நடித்த பெருமையை நடிகை பத்மினி தட்டிச் செல்கிறார். இதுவரை 29 படங்களில் சிவாஜியுடன் பத்மினி நடித்திருக்கிறார். சிவாஜி நடித்த 17 படங்களை பீம்சிங் டைரக்ட் செய்திருக்கிறார்.

பாவமன்னிப்பு, பாசமலர், திருவிளையாடல், ஆகிய படங்கள் 25 வாரங்களுக்குமேல் ஓடி, சென்னை நகரில் வெள்ளிவிழா கொண்டாடின.

பராசக்தி படம் திருச்சி வெலிங்டனிலும், இலங்கை மைலன் தியேட்டரிலும் 35 வாரங்கள் ஓடியது.

வீரபாண்டிய கட்டபொம்மன் மதுரை நியூசினிமாவிலும் பாகப் பிரிவினை மதுரை சிந்தாமணியிலும் 25 வாரங்களுக்குமேல் ஓடியது.

சிவாஜி கணேசன் நடித்த முதற்படமான 'பராசக்தி' ஏ. வி. எம். ஸ்டுடியோவில் நேஷனல் பிக்சர்சாரால் தயாரிக்கப்பட்டது. கிருஷ்ணன்-பஞ்சு டைரக்ட் செய்தார்.

சிவாஜி நடித்துள்ள 125 வது படத்தை ஏ. வி. எம். புரொடக்சன்சார் தயாரிக்கிறார்கள். கிருஷ்ணன் பஞ்சு டைரக்ட் செய்திருக்கிறார்கள். முதல் படத்தையும் 125வது படத்தையும் டைரக்ட் செய்யும் பெருமை பெற்றவர்கள் இரட்டையர்கள் கிருஷ்ணன்-பஞ்சு என்பது குறிப்பிடத்தக்கது.

சிவாஜி இதுவரை நடித்த படங்களுள் சென்னை நகரில் 44 படங்களும் வேலூரில் 'காவேரி'யும், சேலத்தில் புதையலும், மதுரையில் பந்தபாசமும், நாகர்கோவிலில் நான் பெற்ற செல்வமும் 100 நாட்கள் ஓடின.

## கே. எஸ். ஜி. படத்தில் எம். ஜி. ஆர்.

டைரக்டர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தயாரிக்கும் கலர் படத்தில் எம். ஜி. ஆர். நடிக்கிறார்.

இதன் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்புகளை கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றிருக்கிறார்.

எம். ஜி. ஆர். நடிக்கும் வள்ளி பிலிம்சின் கலர் படத்தின் கதை, வசனம், பொறுப்புகளையும் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் ஏற்றிருக்கிறார்.

இப்படத்திற்கு இன்னும் பெயர் சூட்டப்படவில்லை. இதன் டைரக்ஷன் பொறுப்பை ப. நீலகண்டன் ஏற்றிருக்கிறார்.

---

## வீட்டில் ஜெமினி என்ன செய்வார்?



இப்பொழுது 100 படங்களில் நடித்து முடித்து மேலும் பல படங்களில் நடித்துக்கொண்டிருக்கும் ஜெமினி கணேசன், வீட்டில் இருக்கும்பொழுது டிராயரும் ஒரு கலர் பனியனும் மாட்டிக்கொண்டு திரிவார். வீட்டைச் சுற்றிப் போடப்பட்டிருக்கும் செடிகொடிகளுக்கு தன் கையாலேயே தண்ணீர் பாய்ச்சும் பழக்கத்தை இன்னும் இவர் வைத்துக்கொண்டிருக்கிறார். செடிகொடிகளுக்கு தண்ணீர் ஊற்றுவது போலவும் கடினமான வீட்டு வேலைகள் செய்வது போலவும் எந்தப் பத்திரிகையிலாவது புகைப்படங்கள் வருவதற்காக ஒரு சில நடிகர்கள் பத்திரிகை நிருபர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அந்தச் சில வேலைகளை உழைத்துச் செய்வதுபோல் பாவனை செய்வார்கள்! ஆனால் ஜெமினி இதற்கு விதிவிலக்கு.

நாடக விமர்சனம்:

## இரு துருவங்கள்

அண்மையில், ஹெவ்லக் டவுன் லும்பினி தியேட்டரில் நடைபெற்ற கலைச்செல்வனின் கதை, வசனம், டைரக்ஷனில் உருவான ''இரு துருவங்கள்'' என்னும் நாடகத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அது ஒரு பணக்காரக் குடும்பத்தை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட சமூகநாடகம். சாதாரண வாழ்க்கையில் நடக்கக் கூடியதாகவே அதன் கதை அமைந்துள்ளது.

ஒன்றே முக்கால் மணித்தியாலம் வரை கொண்ட நாடகத்தை ஒரு பங்களாவினையே களமாகக்கொண்டு அமைத்த பெருமை பாராட்டத்தக்கது. வசனம் ஆங்காங்கு அடுக்கு வசனம் பொருந்தியதாகவும், இலக்கிய நடையில் அமைந்ததாகவும் காணப்பட்டது. மேலும் பல வர்ணனைகளும், வாழ்க்கைக்கு உதவும் அறிவுரைகளும் போதனைகளும் மிகுந்திருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

கதாநாயகியாக நடித்த குமாரிராஜம் பலவகையிலும் தான் ஒரு அனுபவம் வாய்ந்த நடிகை என்பதைக் காட்டி விட்டார். அவர் மணஞ்செய்ய மறுக்கும்காரணம் அவரது தந்தைக்கும் சகோதரனுக்கும் புதிராக இருந்ததுமட்டுமன்றி அவரது நடிப்புத் திறமையால் பார்வையாளருக்குமே புதிராக்கி விட்டார். வேண்டிய அளவுக்குக் கத்திக், குளறிக் கண்ணீர் வடித்துப் பார்வையாளர்களையே அழவைத்தமை அவரது சோக நடிப்பின் திறமைக்குச் சான்றாகும்.

விசுவாசம் நிறைந்த வேலைக்காரன் பாலனாக நடித்த ஏ. செல்வராஜ் நகைச்சுவை நடிகனாகவும் அதே நேரத்தில் ஒரு குணசித்திர நடிகனாகவும் காட்சியளித்தார். குறைந்த அளவு நேரம் மேடையிற் தோன்றினாலும் பார்வையாளர்களை அழவும் சிரிக்கவும் வைத்து மனதை விட்டகலாத பாத்திரமாக இடம் பெற்று விட்டார்.

மேஜர் ஜகதீஷ் பாத்திரம் தாங்கிய எம். எம். ஏ. லத்திப், ரவி பாத்திரம் தாங்கிய என். எம். ரவீந்தர், செல்வம் பாத்திரம் தாங்கிய கலைச் செல்வன் ஆகியோர் தமது பங்கைத் திறம்படச் செய்து முடித்தனர்.

நடனங்கள், பாடல்கள் பாத்திரப் படைப்பு, கதை அம்சம், நடிப்பு ஆகிய பல துறைகளிலும் சினிமாவைப் பின்பற்றியுள்ளமை நாடகத்துறை முன்னேற்றத்திற்குகந்ததெனக் கூற முடியாது!

நாடகத்திற் புதுமை என்று ஒன்றைக் காண்பது தென்றால், நாடகத் துறைக்கு ஆபாசத்தை இயன்ற அளவு புகுத்தியமையைத் தவிர வேறொன்றும் காண்பதற்கில்லை.

கதையின் முற்பகுதியைப் பாத்திரக் கூற்றாகத் தொடங்கி நினைவுக் காட்சியாக அமைத்துள்ளமை சலிப் [illegible] கொள்ளும் ஒருவகை நாடக உத்தியாகக் கையாளப்பட்டுள்ளது.

திரைவாணன்
சுதந்திரன்
கலைப் பூஞ்சோலை
த. பெ. இல. 11 83.
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4வது வெற்றிவாரம்
கெப்பிட்டல் (கொழும்பு)



மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரிப்பு
எதிரிகள் ஜாக்கிரதை!
டைரக்ஷன் R. சுந்தரம் B.A.




# இப்பொழுது காட்சிதருகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)

மற்றும் 5 திரைகளில்

★ சிவாஜிகணேசன்,
★ தேவிகா,
★ சகஸ்ரநாமம்,
★ ராஜஸ்ரீ, ★ நாகேஷ்,
★ வி. கே. ராமசாமி
—நடிக்கும்—



நீலவானம்

# 4-வது ஜனத்திரள் வாரம்!!

சென்ரல் (மருதானை) | ரீபுர (நீர்கொழும்பு) | சென்ரல் (நாவலப்பிட்டி) | ஈஸ்வரன் (கினிதொச்சி) | சென்ரல் (பருத்தித்துறை)

எம். ஜி. இராமச்சந்திரன், ஜெயலலிதா, நாகேஷ்,
★ முத்துராமன், ★ விஜயகுமாரி, ★ அசோகன், ★ மனோரமா ★ சாண்டோ சின்னப்பாதேவர்
தேவர்பிலிம்ஸ் —மற்றும்பலர் நடித்த— [பாஸ்கள் ரத்து]

தேர்த்திருவிழா

டைரக்ஷன்
எம். ஏ. திருமுகம்.

இசை
கே. வி. மகாதேவன்



எமது அடுத்த வெளியீடு!!
நடிகர் திலகம் ★ சிவாஜிகணேசன் ★ பி. சரோஜாதேவி
★ நாகேஷ் ★ பாலாஜி ★ சுந்தரராஜன் ★ வி. கே. ராமசாமி
❁ பேபி ரோஜாரமணி
மற்றும் பலர் நடித்த
டைரக்ஷன்:
ஏ. சி. திரிலோகச்சந்தர் M.A.
இசை:
எம். எஸ். விஸ்வநாதன்

சுஜாத்தாவின்
என் தம்பி

# இப்பொழுது வெற்றிமுரசு கொட்டி ஓடுகிறது



செல்லமகால் (கொழும்பு) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) ஈரோஸ் (பாமன்கடை)

❁ எம்.ஜி. ஆர்., ❁ ஜெயலலிதா,
● அசோகன், ● நம்பியார் —நடிக்கும்—

இரகசியப் பொலீஸ் 115
(ஈஸ்ட்மென்கலர்)

விரைவில்: கெயிட்டி (கொழும்பு)
ரவிச்சந்திரன், பாரதி, அசோகன், பாலையா, சந்திரபாபு
—நடிக்கும்

வாலிப விருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டெட் [illegible]த்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி 194 ஏ; இலக்கத்தில் 1968-வருடம் டிசம்பர் மாதம் 11-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. தொலைபேசி: 23411